1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 12-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு பங்குனிமாதம் 29-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## செபமாலையும் - சுவிசேஷமும்

செபமாலை செபிக்கும்போது காரணிக்கங்களைத் தியானிப்பது அவசியமாகும். காரணிக்கங்களின் பேரில் தியானஞ்செய்கிற விதம் மருதமடுத்திருப்பதில் அதிகம்தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறெனில், படங்களை உதவியாகக்கொண்டு காரணிக்கவிளக்கங்களுடன் செபமாலைசெபிக்கப்பட்டு வந்ததிலிருந்தேயாகும். இவைபோன்ற தியானங்களைப் புத்தகங்களிலும் வாசித்திருக்கிறோம். இன்னும் இக்காரணிக்கங்களின் விளக்கங்களை விரிவாகஅறியவும், ஆழமாகத் தியானிக்கவும் உதவியாயிருக்குமென்ற நம்பிக்கையுடன் செபமாலைக்காரணிக்கங்கள் சம்பந்தமான சுவிசேஷவாக்கியங்களை இங்குதருகிறோம்.

### முதலாவது களிகூர்ந்த காரணிக்கம்

"ஆறும்மாதத்திலே கபிரியேல்என்னுந்தேவதூதன் கலிலேயாநாட்டிலுள்ள நசரேத்தூருக்குச் சருவேசுரனால்அனுப்பப்பட்டுத் தாவீதின் கோத்திரத்தாராகிய சூசையப்பர்என்னப்பட்ட ஓர் மனிதனுக்கு விவாகபந்தனமான ஓர்கன்னிகையிடத்தில் வந்தார். அந்தக் கன்னிகையின்பேர்மரியம்மாள். தேவதூதன் அவளிருந்தஇடத்தில் பிரவேசித்து: பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர்உம்முடனே ஸ்திரீகளுக்குள்வே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே என்றார். இதை அவள் கேட்டமாத்திரத்தில் அவருடைய வார்த்தையினால் கலங்கி, இந்தமங்களம் எத்தன்மையானதோ என்று யோசனையாயிருக்கையில், தேவதூதன் அவளைநோக்கி: மரியே! நீர்அஞ்சவேண்டாம்; ஏனெனில். சருவேசுரனிடத்தில் கிருபைபெற்றிருக்கிறீர்; இதோ உமதுஉதரத்தில் கெற்பந்தரித்து ஓர்குமாரனைப்பெறுவீர்; அவருக்கு யேசுஎன்னும் நாமஞ்சூட்டுவீர்; அவர் பெரியவராயிருப்பார்; உன்னதமானவருடைய சுதன்என்னப்படுவார்; ஆண்டவரான சருவேசுரன் அவர்தந்தையாகிய தாவீதின்சிங்காசனத்தை அவருக்குத்தந்தருளுவார்; ஆதலால் அவர் யாக்கோபுவின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய அரசாட்சிக்கு முடிவு இராது என்றார்.

"அப்போதுமரியம்மாள்தேவதூதனைப்பார்த்து: இது எப்படியாகும்? நான் புருஷனைஅறியேனே என்றுசொல்ல, தேவதூதன் அவளுக்குமாறுத்தரமாக, இஸ்பிரீத்துசாந்து உமதுமேல் எழுந்தருளிவருவார்; உன்னதருடைய வல்லபமானது உமக்குநிழலிடும்; ஆகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர்தேவசுதன்என்னப்படுவார்.

"அப்போது மரியம்மாள், இதோநான் ஆண்டவருடைய அடிமை, உம்முடையவார்த்தையின்படியே எனக்காகக்கடவது என்றாள்" (லூக். I. 26-38)

"இப்போது யேசுக்கிறீஸ்துநாதருடைய தாயாராகிய மரியம்மாள் சூசைஎன்பவருக்குத் திருமணவாளியாய் இருக்கையில் அவர்கள்கூடியிருக்குமுன்னே அவள் இஸ்பிரீத்துசாந்துவினால் கெற்பவதியாகக் காணப்பட்டாள். ஆனால் அவளுடையபத்தாவாகிய சூசைஎன்பவர் நீதிமானாய் இருந்ததினாலும், அவளைக்காட்டிக்கொடுக்க மனமில்லாததினாலும் இரகசியத்தில் அவளைஅனுப்பிவிடக் கருதியிருந்தார். இவைகளைப்பற்றி அவர் யோசித்துக்கொண்டிருக்கையில், இதோ ஆண்டவருடைய தூதன் நித்திரையில் அவருக்குத்தோன்றிச் சொன்னதாவது: சூசையே, தாவீதின் குமாரனே, நீர் உமது மனைவியாகிய மரியம்மாளை அங்கீகரித்துக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில், அவளிடம் உண்டானகெற்பம் இஸ்பிரீத்துசாந்துவினால் ஆயிற்று; அவள்ஒரு குமாரனைப்பெறுவாள். நீர்அவருக்கு யேசுஎன்னும் நாமம் சூட்டுவீர்; ஏனெனில் அவரே தமதுசனத்தை அவர்களுடைய பாவங்களினின்று இரட்சிப்பார்; இவையாவும் ஆண்டவர் தீர்க்கதரிசியால் மொழிந்தது நிறைவேறும்படியாயிற்று. அவர் சொல்வதேதெனில் ஒருகன்னி கெற்பந்தரித்து ஒருபுத்திரனைப் பெறுவாள். அவருக்கு எம்மானுவேல்என்னும்நாமமிடுவார்கள். அதற்குச் சர்வேசுரன் நம்மோடு என்றர்த்தமாம்." (மத். I. [illegible])

## ஊதாரிப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

மாசற்ற செம்மறிப்புருவையைப் பின்பற்றி அவர் செல்லும்இடமெல்லாம் அவரைச் சூழ்ந்து சர்வேசுரனுடைய பரிசுத்தசிம்மாசனத்தின்முன் நிற்கும் சுத்தஆத்துமாக்களைப் பற்றிமிகஉருக்கமும், மனஅருட்சிக்குரியனவுமான கானங்களைத் திருச்சபைபாடுகின்றது. ஆனால், அர்ச். மரியமதலேனம்மாள், அர்ச். சின்னப்பர், அர்ச். அகுஸ்தீனார் முதலிய அர்ச்சியசிஷ்டர்களான மனந்திரும்பியவர்களின் திருநாட்களையும் திருச்சபை மிகுந்த ஆர்வத்துடனும், மனவருட்சியுடனும் கொண்டாடுகின்றது. பாதுகாக்கப்பட்ட மாசில்லாமைக்குப் பக்கத்திலே மீண்டும் வெற்றிகொள்ளப்பட்ட மாசில்லாமையையும்திருச்சபைகொண்டாடுகின்றது.

மனந்திரும்பிய பாவிக்கும் நல்லபாவசங்கீர்த்தனம் அகமகிழ்ச்சி உண்டுபண்ணுகின்றது. நல்லபாவசங்கீர்த்தனம் செய்தபிற்பாடு ஆத்துமத்துக்கிருக்கும் ஆறுதல் எவ்வளவு! மனச்சாட்சிக் கண்டனமும், பாவத்துடன் சாகப்போகிறேனேஎன்ற பயங்கரமும், திடுக்காட்ட மூண்டுபண்ணும் மாயரூபம்போல அவனை இடைவிடாது பின்தொடர்ந்த பாவங்களின் ஞாபகமும் எல்லாம் பறந்துவிட்டன. பாவியாய் இருந்தவன் ஆறுதலுடன் பெருமூச்சுவிடுகிறான். மனப்பாக்கியம் அடைகிறான். நல்லபாவசங்கீர்த்தனம் செய்துவிட்டுக் குருவானவரின்பாதத்தை விட்டுவிலகும் யார்தான் இவ்விதசந்தோஷத்தை அநுபவிக்கவில்லை.

கடந்த முதலாவது உலகயுத்தத்திலே 1914-ம்ஆண்டு மனந்திரும்பிய ஹென்றி கேயோன் (Henry Gheon)என்பவர் தனது பாவசங்கீர்த்தனத்தைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார். "என்தலையைக் கையாற்பிடித்துக்கொண்டு பேசத்தொடங்கினேன். எனது பாவங்களை ஆற்றுநீர்ஓட்டம்போல் பாய்ந்துகொண்டிருக்கும்படிசெய்தேன். நான் அவைகளைச்சொல்லச்சொல்ல அவைகள்என்னைவிட்டகன்று வெளியேறியதாக உணர்ந்[illegible]வங்களைச் சொல்லச் சொல்லப் பொறுதிஅடைந்துகொண்டதையும் உணர்ந்தேன். என்இருதய அடித்தளத்திலிருந்து கசப்பானமண்டிகள்கட்டிகட்டியாக உவாந்திக்கப்பட்டு வெளிச்செல்வதைஉணர்ந்தேன். இவ்வளவு உயிரற்றபாரச்சுமைகளுடனும், எனது தசைநாரில் சுவறியிருந்த நஞ்சுடனும் என் இருதயம் எப்படித்தான் துடித்துக்கொண்டிருந்ததோ அறியேன். நான் ஒருமனுஷனில் எனது நம்பிக்கையை வைத்தேன். சருவேசுரனும் எனது மன்றாட்டுக்குச் செவிசாய்க்கலானார்.

"இருபது வருஷம் பாவத்தோடு இருந்தேன். முன்னொருபோதும்அறியாத ஆனந்தபரவசம் என்னைமேற்கொண்டது. சந்தோஷத்தினால் ஓடினேன். ஆனந்தத்தினால் சிறகுகட்டிப் பறப்பவன்போலானேன். எனக்கு ஒருசரீரம்உண்டென்பதையும் மறந்துவிடலானேன்" என்பதுவேஹென்றிகேயோன் கூறியதாம்.

நல்லபாவசங்கீர்த்தனம் செய்த ஒரு கத்தோலிக்கன் பாவசங்கீர்த்தனத் தட்டியை விட்டுப் புறப்படும்பொழுது, தனதுபாவங்கள் பொறுக்கப்பட்டனவென நிச்சயமாயிருக்கிறான். ஆனால், பாவசங்கீர்த்தனத்தைப் புறக்கணிக்கும் ஒரு புரொட்டஸ்தாந்தனின் பாடென்ன? வருஷக்கணக்கான என்பாவங்கள் பொறுக்கப்படுமா? என்று தன்னைக்கேட்டுக்கொண்டிருக்கிறான். மரணப்படுக்கையிற்றானும் நான் இரட்சிக்கப்படுவேனோ? சாபத்தீர்வைக் குள்ளாவேனோ? என்றே கேட்டுக்கொள்வான். மனந்திரும்பிய ஜோர்கென்சன் என்பவர் ஒரு தென்மார்க்குதேச கல்விமான். "நான் ஐரோப்பா முழுவதும் பிரயாணம்பண்ணினேன். வடதேசங்களிலே உண்மையான முகமலர்ச்சியுள்ளவர்களை நான் கண்டதேயில்லை. அகமலர்ச்சியைத் தங்கள் முகமலர்ச்சியாற் காண்பித்தவர்களைக் கத்தோலிக்கசெபங்களில்மாத்திரம் கண்டேன். பாவசங்கீர்த்தனத்தின் நற்பலனைப்பார்" என்று இவர் எழுதியிருக்கிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்மேல்உத்தரிய நூற்றாண்டுவிழா

மேல்நாடுகளிலே கார்மேல் சபையாரின் முதலாவது சிரேஷ்டராக விளங்கியிருந்த அர்ச். சைமன் ஸ்ரொக்கின் திருஎன்புகள் எழுநூறு வருடங்களுக்குப் பிறகு வருகிற ஆடிமாதத்திலே பிரான்ஸ்தேச போர்டோநகரிலிருந்து இங்கிலாந்திலுள்ள ஐலெஸ்போட் எனுமிடத்துக் கார்மேல்சபை ஆச்சிரமத்துக்குக் கொண்டுபோகப்படவிருக்கிறது. அவர் முதற்சிரேஷ்டராகத் தெரியப்பெற்ற இந்த ஆச்சிரமத்திலே அவரது நண்பரும், இந்தஆச்சிரமத்தை நன்கொடையளித்தவருமான பறன்றிச்சேட் கிறேய் அவர்களது கல்லறையின்பக்கமாக அவருடையஎன்புகள் திரும்ப அடக்கஞ்செய்யப்படவிருக்கின்றன. அர்ச். சைமன் ஸ்ரொக்குக்குத் திருக்கார்மேல்உத்தரிய காட்சி அருளப்பெற்ற எழுநூறும் ஆண்டு நிறைவுவிழாவின் ஞாபகார்த்தமாய் வருகிறஆடிமாதம் 15-ம் 16-ம் திகதிகளில் நடந்தேறும் கொண்டாட்டங்களின்போது இந்த மறுஅடக்கம்நடைபெறும். இவ்விழாவின்போது ஐரோப்பியநாடுகள் பலவற்றிலும், அமெரிக்கஐக்கியதேசத்திலுமிருந்து அநேகயாத்திரைகள் அங்கு நடைபெறவிருக்கின்றன.

**பத்தாம்பத்திநாதர்**

பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டப்படும்போது, நித்தியநகரானது முன்னெருபோதுமேயில்லாத பெருந்திரளான பக்தர்களால் தேங்கியிருக்குமென அந்நகரிலிருந்தும், பல்வேறு ஐரோப்பிய தேசங்களிலிருந்தும் கிடைத்துள்ள அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இத்திருவைபவமானது அவர் ஞானதீட்சை அருளப்பெற்ற வருடாந்ததினமாகிய ஆனிமாதம் 3-ந்திகதி நடந்தேறுமென நம்பப்படுகிறது. அவர் முதலாவது உலகயுத்தம் ஆரம்பமாகிச் சிலதினங்களின்பின், அதாவது 1914-ம் ஆண்டு ஆவணிமாதம் 20-ந் திகதி பரமபதம்அடைந்தார். முத்திப்பேறுபட்ட திருவைபவம் அர்ச். பேதுருவானவர் மகாலயமைதானத்திலே, பரிசுத்தபிதாவின் சமுகத்திலே நிகழுமெனத் தெரிவிக்கப்படுகிறது. வழமையிலே அவர் இதற்குச் சமுகமளிப்பதில்லை. திருவைபவத்திற்குச் சமுகமளிக்குமாறு பத்தாம்பத்திநாத பாப்பானவரின் சுற்றத்தவர்கள் இருவர் பிறேஸில்நாட்டிலிருந்து இத்தாலி போய்ச் சேர்ந்திருக்கின்றனர். வண. அன்ரோனியோ சாத்தோ சுவாமியாரும், ஸ்ரீமதி மார்கெறிற்ரு பேட்ராஸோ சாத்தோவுமே அவ்விருவருமாவர்.

**மனந்திரும்பிய பாதிரியார்**

எச். எம். எஸ். ஹூட்என்ற பிரித்தானிய யுத்தக்கப்பலிலே முன்னர் அங்கிளிக்கன் சபை விசாரணைப் பாதிரியாராயிருந்து இற்றைக்கு நான்கு வருடங்களின்முன் மனந்திரும்பிப் "பக்பாஸ்ற் அபே" என்ற சந்நியாச ஆச்சிரமத்திலே கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்டவரான கனம். தோமஸ் ஹொஸ்பீல்ட் அவர்கள் ரோமாபுரியிலே நிகழும்பங்குனிமாதம் 10-ந்திகதி சனிக்கிழமை குருத்துவாபிஷேகஞ்செய்யப்படலாயினர். ஹூட் எனும் யுத்தக்கப்பல் ஆழ்த்தப்படச் சிறிதுகாலத்தின் முன் இவர் மற்றோர்கப்பலுக்கு மாற்றப்பட்டிருந்தார். கத்தோலிக்க திருமறையிற்சேர்ந்து சிலமாசங்களின்பின் இவர் பீடாகுருமடத்திலே குருப்பட்டத்திற்குப் படிக்குமாறு ரோமாபுரி சென்றார். நியூசிலாந்தில் பிறந்தஇவர் தமது நான்காம்வயதிலே இங்கிலாந்துசென்று ஒக்ஸ்வோட் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம்பெற்று, ஆபிரிக்காவில் ஓர் மிஷனரியாகுமுன் வன்ரேஜ், பேர்க்ஸ், லண்டனிலே கிறஹம வீதியிலுள்ள அர்ச். மரியாயின் கோவில் ஆதியவற்றிலே விசாரணைப் பாதிரியாராயிருந்தார். கடற்படை விசாரணைப்பாதிரியாராகத் தாம் கடமைபார்த்த எட்டுவருடங்களிலும் மத்தியகிழக்குநாடுகளிலும், பசிபிக் சமுத்திர கடற்படையுடனும் இவர் சேவைபுரிந்திருக்கிறார்.

**கிறகோரியாரின் சர்வகலாசாலை**

தனது நான்காவது நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடுகின்ற றோமானியகல்லூரியாகிய தமது பழையகல்விச்சாலையின் பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பழையமாணவர்களுக்கும் சமீபத்திலே பரிசுத்த பாப்பரசர் பிரசித்தபேட்டி ஒன்று அருளலாயினர். தற்போது கிறகோரியாரின் சர்வகலாசாலையெனப் பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற இக்கல்லூரியிலே பாப்பரசர் ஓர்பாலியராய் இருந்தபோது 1885-ம் ஆண்டுமுதல் 1894-ம் ஆண்டுவரையில் கல்விபயின்று வகுப்பிலே எப்போதும் முதலிடம் வகித்திருந்தார். அவர்களையெல்லாம் பேட்டிக்கு அழைத்துச்சென்ற றோமைநகர் மேயரோடும், தமது வகுப்புத்தோழராயிருந்த பழையமாணவர்களோடும் பரிசுத்தபிதா அளவளாவிச் சம்பாஷித்தார். கிறகோரியாரின் சர்வகலாசாலை பிற்காலத்திலே அர்ச். பிரான்சிஸ் போஜியார்எனப் பெயர்விளங்கிய கான்டியாவின் டியூக் கோமகனுர் உபகரித்தபணங்கொண்டு அர்ச். லொயலா இஞ்ஞாசியாரால் 1551-ம்ஆண்டு அடியிடப்படலாயிற்று.

**புதியகத்தோலிக்க சர்வகலாசாலை**

ஆஸ்திறேலியாவிலே முதன்முதலாகச் சிட்னிநகரிலே புதிய தென்வேல்ஸ்நாட்டு அரசாங்கத்தின் அனுமதியோடு ஓர்கத்தோலிக்க சர்வகலாசாலை அமைக்கப்படவிருக்கிறது. தற்போது சிட்னிநகரில் இருந்துவருகின்ற சர்வகலாசாலையின் அதேவரிசையிலே இதுவும் வித்தியாபட்டங்களும், வித்தியா கௌரவபத்திரங்களும் வழங்க அதிகாரமளிக்கும் சட்டம்ஒன்றை அரசாங்கம் ஆக்கவிருக்கின்றது. திருச்சிலுவைக்குருமார் புதியசர்வகலாசாலைக்கென்று சிட்னிநகருக்குச்சமீபமாக 200 ஏக்கர் விஸ்தீரணமான ஓர்நிலத்தை வாங்கியிருக்கின்றார்கள். இதிலே கல்விபயிலச் சகலசமயத்தவர்களும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இதன் பட்டதாரிகள், பேராசிரியர்களின் பிரதிநிதிகளை அடக்கிய செனற்சபைஒன்றால் அது நடத்தப்படும். இதற்குப்பண உதவி அளிக்குமாறு அரசாங்கம் கேட்கப்படவில்லை.

**மனந்திரும்பிய ஜெனறல்**

மனுத்தன்மைக்குமாறான குற்றங்கள் செய்தாரெனக் குற்றஞ்சாட்டி நூறெம்பேர்க்நகரில் விசாரணைசெய்து மரணதண்டனை விதிக்கப்பட்ட நாஸியஜேர்மன் எஸ். எஸ். பட்டாளதலைவரான ஜெனறல் ஒஸ்வால்ட் பொல்என்பவர் லான்ட்ஸ்பேர்க சிறைச்சாலையின் மரணச் சிற்றறையிலிருந்து எழுதியகடிதம் ஒன்றிலே தாம்மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்துவிட்டதாகத் தெரிவித்திருக்கின்றார். "பிரமாணிக்கமாக நிலைத்திருந்த தமது நண்பர்க"ளுக்கென்று எழுதப்பட்ட இக்கடிதம் ஒக்ஸ்பேர்க் நகர "கதலிக் வீக்லி" எனும் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. அதிலே இவர் "நான் புதிதாகக் கண்டடைந்த சமயமானது மரணத்தின்முன்பாக அசைக்கமுடியாமல் நிற்க எனக்குப் பெரும்ஆற்றலைத் தருகின்றது! ஓர்பட்டாளத்தலைவர் என்றமட்டிலே நித்தியசர்வேசுரனின் பரிசுத்தமகத்துவத்தின் முன்பாகப் பயபக்தியோடும், தாழ்மையோடும் எனது முழந்தாள்களை மடிப்பது எனக்கு அதிகம் கௌரவமாகும்" என வரைந்திருக்கிறார்.

**முதற்பாப்புமாரின் கல்லறைகள்**

அர்ச். பேதுருவானவரின் கல்லறையைஅடக்கிய அவரது மகாலயத்தின்கீழுள்ள புராதன அஞ்ஞான சேமக்காலையிலே புதைபொருள் ஆராய்ச்சியாளர் முதற்பதினைந்து பாப்புமாரின் கல்லறைகளில் ஒருவர்நீங்கலாக ஏனையோரின் கல்லறைகளைத் தேடிஆராய்ந்து வருகின்றனர். அவ்விதம் நீங்கலாகவிருப்பது வேதசாட்சியான அர்ச். கிளமென்ற் பாப்பானவரின் கல்லறையே. இவர் அம்மகாலயத்தின்கீழ் அடக்கஞ்செய்யப்படவில்லையெனப்பாரம்பரியம்கூறுகின்றது. பதினைந்துபாப்புமாருள்ளும் ஒருவர்தவிர ஏனையோரெல்லாம் வேதசாட்சிகளாக மரணமடைந்தார்கள். பரம்பரையாகவந்த கிறீஸ்தவர்களாலே பத்திசெய்யப்பட்டு உண்டான அடையாளங்களைக் கொண்டு அக்கல்லறைகளைக் கண்டறியமுடியுமென்று நிபுணர்கள் நம்புகின்றார்கள்.

### கர்த்தர் உத்தானத்தின் பின்
## 1-ம் ஞாயிறு
(தவளோற்சவ ஞாயிறு)

**சுவிசேஷ வாசிப்பு**

( அரு. 20: 19—31 )

அக்காலத்தில் வாரத்தின் முதல்நாளாகிய அன்றையதினம் சாயங்காலமாகி, சீஷர்கள் கூடியிருந்த வீட்டின்கதவுகள் யூதர்பயத்தின் நிமித்தம் சாத்தப்பட்டிருக்கிறபோது யேசுநாதர் வந்து நடுவிலே நின்று: உங்களுக்குச் சமாதானம் உண்டாகுக! என்று அவர்களுக்குச்சொன்னார். அன்றியும் அவர் இதை வசனித்தபின்பு தம்முடைய கரங்களையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆதலால், சீஷர்கள் ஆண்டவரைக் கண்டதைப்பற்றிச் சந்தோஷப்பட்டார்கள். அவர் மறுபடியும் அவர்களைப்பார்த்து: உங்களுக்குச் சமாதானம் உண்டாகுக! பிதா என்னை அனுப்பினதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். அவர் இவைகளைச் சொன்னபின்பு அவர்களின்மேல்ஊதி அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இஸ்பிரீத்துசாந்துவானவரைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படுகின்றன; எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவைகள் மன்னிக்கப்படாதிருக்கின்றன என்றார். பன்னிருவரில் ஒருவராகிய திதீம் என்னப்படுகிற தோமையாரோவெனில் யேசுநாதர் வந்தபோது அவர்களோடிருக்கவில்லை. ஆகையால் மற்றச் சீஷர்கள்: ஆண்டவரைக் கண்டோம் என்று அவரிடம் சொன்னபோது, அவர்: நான் அவருடைய கரங்களில் ஆணிகளின் துவாரத்தைக் கண்டு, ஆணிகளின் இடத்தில் என் விரலைவிட்டு, அவருடைய விலாவில் என் கரத்தை விட்டாலொழிய விசுவசியேன் என்று சொன்னார். எட்டுநாளைக்குப் பின்பு அவருடையசீஷர்கள் மறுபடியும் உள்ளே இருந்தார்கள்; அவர்களோடு தோமையாரும் இருந்தார். கதவுகள் சாத்தப்பட்டிருக்கையில் யேசுநாதர் வந்து நடுவில்நின்று: உங்களுக்குச் சமாதானம உண்டாகுக! என்றார். பின்னுந் தோமையாரைநோக்கி: இங்கே உன் விரலை இடு; என்கரங்களைப் பார்; உன்காரத்தையும் நீட்டி என் விலாவிலே வை. இனி, அவிசுவாசியாயிராமல விசுவாசியாயிரு என்று திருவுளம்பற்றினார். தோமையார் மறுமொழியாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்க; தோமையே, நீ என்னைக் கண்டதினால் விசுவசித்தாய்; காணாதிருந்தும் விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள் என்று யேசுநாதர் அவரிடம் கூறினார். இப்புத்தகத்தில் எழுதப்படாத வேறுஅநேக அற்புதங்களையும் மெய்யாகவே யேசுநாதர் தம்முடைய சீஷர்கள் முன்பாகச் செய்தருளினார். ஆனால், யேசுநாதர் சர்வேசுரனுடைய சுதனாகிய கிறீஸ்துவாயிருக்கிறார் என்று நீங்கள் விசுவசிக்கும்படியாகவும், விசுவசித்து அவருடைய நாமத்தால் நித்தியசீவியத்தை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவரைக் கண்டோம்

ஆஸ்திரியாவுக்குத் தப்பியோடிய ஹங்கேரிய சட்ட அதிகாரிகள் இருவருடன் சம்பாஷித்தவரான சால்ஸ் பேர்க்நகரிலுள்ள விசேஷ நிருபர் ஒருவரால் "கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவரின் சிறைச்சாலை வாழ்க்கைபற்றி நேரேபெற்றுக்கொண்ட ஓர் வரலாறு" என வர்ணித்துக் கூறப்படும் செய்தியொன்று "டெய்லிரெலிகிறவ்" எனும் பத்திரிகையிலே பிரசுரமாயிருக்கிறது.

"புடாபெஸ்ற்நகரிலே கருதினல் ஆண்டவர் கைதியாக வைக்கப்பட்டிருக்கின்ற சிறைசாலைக்கு அளித்த உத்தியோகபூர்வமான ஓர் தரிசனையின்போது, சமீபத்திலே அதாவது மூன்று வாரங்களின்முன் அவரைத் தாங்கள் கண்டதாக அவர்கள் சாதிக்கின்றார்கள். மாசிமாதம் 6-ந் திகதியன்று தாங்கள் கருதினலாண்டவரைத் தரிசித்த போது, அவர் கட்டிலில் படுத்துக்கிடந்தார். அவர் பாண்டு வர்ணமுள்ளவர்போல் அதிகம் வெளுத்தவராயிருக்க, முகத்திலே ஒருபக்கத்துத் தசைநார்கள் விறைத்துப் போயிருக்கக் காணப்பட்டன.

"ஆனல், நியாயமான நல்ல சுகத்தோடு இருப்பவர்போலத் தோன்றி முற்றும்சாவகாசமாக எங்களுடன் சம்பாஷித்தார். அவருக்குக் கொடுபடும் உணவு நன்றாயிருந்தது. விசேஷ சிறைச்சாலைப் போசனத்துக்குரிய அநேக பதார்த்தவகைகளும் அதில் அடங்கியிருந்தன. நீதிஸ்தலத்திலே அவரை விசாரணைசெய்தபோது, கம்யூனிஸ்தர்கள் தங்களுக்குச் சாதகமாக அவரிடமிருந்து 'அறிக்கை'களைப் பலவந்தமாகப் பெற்றுக்கொள்ளுமாறு மருந்துகள் பிரயோகிக்கப்பட்டன என்பதை அவர்கள் உறுதிசெய்தார்கள்.

"எல்லாவகையாலும் கருதினலாண்டவர்மட்டிலே இயன்றமட்டும்சிறந்தகரிசனை எடுக்கவேண்டுமென்று ஹங்கேரிய அரசாங்கம் மிகுந்த அங்கலாய்ப்புக்கொண்டதாய் இருப்பதாகத் தோற்றுகிறது. இதெல்லாம் அவரின்மரணமானது ஹங்கேரிய தேசரோமான் கத்தோலிக்கர் மத்தியிலும், வெளி உலகத்திலுமாகப் பலமான எதிர்த்தாக்குதலைத் தூண்டிவிடுமென்ற கவலை பற்றியேயென்று கருதப்படுகிறது. உதாரணமாக, சென்றவருடம் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களிலே அவரின் சுகநிலை திடீரெனக் குன்றியபோது, அவர் செக்கோசிலவாகியாவுக்குக் கொண்டுபோகப்பட்டு ரற்ரா மலைகளிலுள்ள கிராமமாளிகை ஒன்றில்வைத்து விசேஷ வைத்தியசிகிட்சை அருளப்பெற்றார். விசேஷஉணவுதயாரிக்கும் இரு சமையற்காரரும், பிறேக்நகர ஆரோக்கியசாலை நேர்ஸ்மாரும் உட்பட அவரோடுஅங்குசென்ற கோஷ்டியுடன் தெரிந்தெடுத்த ஏழுகாவற்காரரும்சென்றார்கள்.

"அங்கே அவருக்குச் செய்யப்பட்டசிகிச்சையை வெறெஸ், பொஸ்பிஸ்சில்என்ற இரு கம்யூனிஸ்த செக்நாட்டு டக்றர்மார் கண்காணித்து வரலாயினர். இந்தச்சிகிச்சையானது முக்கியமாக ஸ்நானத்தையும், தசைநார்கள்பொருத்துக்களைக் கைகளால் தேய்த்து உருவுதல், விசேஷ உணவு ஆதியவைகளை அடக்கியிருந்தது. அக்காலத்திலே தமக்குநடந்த சிகிச்சை 'அதிகம் மரியாதையாயும், இதமாயும்' நடைபெற்றதாகக் கருதினலாண்டவர் எனக்கு இதை அறிவித்தோரிடம் விரிவாக எடுத்துக்கூறினர். சிகிச்சை முடிவடைந்ததும் தற்போது அவர் இருந்துவரும் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பெற்றார்.

"ஒவ்வோர் இருவாரத்துக்கும் ஒருமுறை அவருடைய தாயார் ஐந்துநிமிஷநேரம் அவரைச்சந்தித்துப்பேச அனுமதிக்கப்பட்டு வருவதாகச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தார்கள். மாதம் ஒன்றுக்கு ஒன்பது பவுண்வரையில் அரசாங்க உபகாரச்சம்பளம் தான் பெற்றுவருவதாக அவர்தாயார் தெரிவித்துள்ளனள்."

### கலரூவும் காப்பியும்

நாம் காப்பிபருகும் கோப்பையொன்றைஎடுத்து சுடுநீரில் நன்றாக அலம்பி அரைக்கரண்டி (மேசைக்கரண்டி) சுத்தமான காப்பித் தூளைப்போட்டு நன்றாகக்கொதிக்கும்நீரை அத்துடன் அதன்மட்டத்திற்குவிட்டு மூடிவிடவேண்டும். 15 நிமிஷத்திற்குப்பிறகு அதைஎடுத்துப்பார்த்தால் காப்பித்தூள் அவிந்த தண்ணீரைக்காணலாம். அந்தநீரை மற்றப்பாத்திரத்திலெடுத்து அத்துடன் ஒருஎலுமிச்சம்பழச்சாற்றைவிட்டுக் கொடுக்கவேண்டும். அரைமணி நேரத்துக்குள் மலத்தையும் வாந்தியையும் நிறுத்திவிடும். ஆகாரம் 'றஸ்க்' என்றுசொல்லப்படும் ரோஸ்ற் செய்த றொட்டிசாப்பிடலாம். பத்தியம்கிடையாது. இவ்விதம் மூன்று வேளை சாப்பிடவேண்டும்.

முக்கியமாகச்சிலருக்கு இந்தவியாதி பயத்தினாலுண்டாவதுமுண்டு. கலரூ கண்டவர்களின் உடல்குளிர்ந்து தளர்ச்சியடைந்தவுடன் அவர்களைச் செத்துப்போய்விட்டார்களென்று புதைப்பதும் நடந்துவருகிறது. அவர்கள் தண்ணீர்கேட்டால்கொடுக்கவேண்டும். உடலுக்கு தவிடுவறுத்து ஒத்தடம் கொடுக்கவேண்டும். இருதினங்களுக்குள் நல்லசுகம் அடைவார்கள்.

(வன்னியமணி பத்திரிகையின் 1-3-51 இதழில் கண்டது.)

—தென்கோறியாவின் தலைப்பட்டணமாகிய செயூல்நகரைவிட்டு ஐக்கிய நாடுகளின்படைகள் வெளியேறி 89 நாட்களுக்குப்பின் சென்ற 14-ந்திகதியன்று தென்கோறிய போர்வீரர்கள் கம்யூனிஸ்தபடைகளின் எதிர்ப்பேயில்லாது அந்நகரில் திரும்பவும் வெற்றிப்பிரவேசஞ்செய்து அதன்பிரதான கட்டடத்திலே குடியரசுக்கொடியை மீளவும்ஏற்றிப் பறக்கவிட்டிருக்கின்றார்கள்.

—லுபியேர்என்ற சகோதரபிரான்சிய எஞ்சினீயர்கள்சேர்ந்து மின்சார சக்திகொண்டு செலுத்தப்படும் நவீன மாதிரியான பிரான்சிய கார்ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். இதன்பெறுமதி 300 பவுண்மாத்திரமே. ஆறுபிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மணித்தியாலம் 60 மைல்வீதம் செல்லக்கூடிய இந்தப் புதியகார் சமீபத்திலே ஜெனீவாநகர மோட்டர்காட்சியில் வைக்கப்படவிருக்கிறது.

# THE "CATHOLIC MESSENGER"

1. **Jaffna Diocesan Representative :**
   Rev. Fr. B. E. Alfred, O.M.I. has been appointed to be a member of the Inter-Diocesan Board of Ceylon Catholic Papers. All those who wish to subscribe to the "Catholic Messenger" may send their names to him.

2. **Diocesan Correspondent :**
   Mr. F. C. Thuraisingham has been appointed the official Correspondent to the Ceylon "Catholic Messenger." All items for publication in the "Catholic Messenger" can be sent to him to the following address :

F. C. THURAISINGHAM ESQR.,
20, Third Cross Street,
Jaffna.

## சுதேச வர்த்தமானம்

### டி. டி. ரி. தொழிற்சாலை

இலங்கையிலே அரசினர் ஸ்தாபிக்கத் தீர்மானித்திருக்கும் டி. டி. ரி. தொழிற்சாலை ஆனையிறவிலே அமைக்கப்படுமெனத் தெரியவருகின்றது. அங்கே இது காரமான சோடாத் தொழிற்சாலைக்கு அதிகஞ்சமீபத்தில் அமைக்கப்படும். காரமான சோடாத் தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்குமாறுஒப்பந்தகாரர் தற்போது அழைக்கப்பட்டிருக்கின்றனர். டி. டி. ரி. தொழிற்சாலையை அமைக்கும் வேலை இருவருடத்தில் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு ஏற்படும் செலவுமதிப்பு 20 லட்சம் ரூபாவாகும்.

### விஷவைத்திய நிபுணர்

திரிகோணமலைத் தொகுதியிலே சர்ப்பம்தீண்டுகிறவர்களுக்குச் சிகிச்சையளிப்பதில் சிறந்தநிபுணர் ஒருவர் இருக்கின்றார். இவர் தற்போது அதிகம் விருத்தாப்பியராகிவிட்டார். இவருக்கு மூன்று புதல்வர்கள் இருந்தபோதிலும் அவர்கள் இந்த விஷவைத்திய முறையைப் பயின்றுகொள்ளவில்லை. இருநூறுவருடகாலத்துப் பழையஏடுகளை இவர் வைத்திருக்கின்றார். சர்ப்பந்தீண்டுவோரைக் குணப்படுத்துவதிலே இலங்கையில் எவரோடுமே தான் போட்டியிடமுடியுமென்று இவர் பெருமைபாராட்டிக் கொள்ளுகின்றார். இந்தவைத்தியமுறையைப் பிறருக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று திரிகோணமலைப் பிரதிநிதியான திரு. எஸ். சிவபாலன் அவர்கள் விடாது அவரைக் கேட்டுவந்ததின் பேரிலே அவர் தற்போது அவ்வாறு செய்ய உடன்பட்டிருக்கின்றார்.

### கட்டாய இரண்டாவதுபாடம்

தேசியஐக்கியத்தையும், தேசீயகலாசாரத்தையும் வளர்ப்பதற்காகச் சிங்களப்பாடசாலைகளில் தமிழும், தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களமும் கட்டாய இரண்டாவது பாடமாகப் படிப்பிக்கப்பட நடவடிக்கைஎடுப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுச் சாவகச்சேரிப் பிரதிநிதியான திரு. வி. குமாரசாமி அவர்கள் இம்மாதம் 14-ந்திகதிகூடிய பிரதிநிதிகள் சபையில் கொண்டுவந்த பிரேரணையை எதிர்க்கட்சியினரும், அரசாங்ககட்சியினரும் ஆதரித்திருக்கின்றனர். அதனால் அரசாங்கம் சம்மதவாக்குக் கேளாமலே அதுபற்றி ஆலோசிக்க ஒப்புக்கொண்டிருக்கிறது.

### பலாமரம்பற்றியவிலக்கு

பலாமரங்களைத் தறிக்கும் விஷயமாக யுத்தகால அவசரகட்டுப்பாட்டினைப் பிந்தஅரசினர் நீக்கிவிட்டமையாலே பலமரங்கள் பெருந்தொகையாகத் தறிக்கப்பட்டுவந்தன. அதனால் அனுமதிச்சீட்டில்லாது அவைகளைத் தறிப்பது திரும்பவும் விலக்கப்படுகின்றது. இது விஷயமாய்ச் சென்ற 13-ந்திகதியன்று பிரதிநிதிகள் சபையில் உடனே தானே ஓர்புதிய சட்டம் மூன்றுமுறையாக வாசித்து அரங்கேற்றப்பட்டிருக்கிறது. அவசியமென்று காணுமிடத்து பனைமுதலாம் ஏனையமரங்களும் இந்தவிலக்கின்கீழ் கொண்டுவரப்படலாமென்று அவ்வேளை கமத்தொழில்மந்திரியார் திரு. டட்லி சேனநாயக அவர்கள் கூறலாயினர்.

### வரியேற்றமும் புதியவரிகளும்

இம்மாதம் 15-ந்திகதி முதல் இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்யப்படும் விளைபொருட்களுள் தேயிலையின் வரி றாத்தலுக்கு 53 சதத்திலிருந்து 60 சதமாகவும்—றப்பரின்வரி றாத்தலுக்குப் 15 சதத்திலிருந்து 50 சதமாகவும்—கொப்பறாவின் வரி கண்டிக்கு 75 ரூபாவிலிருந்து 100ரூபாவாகவும்—தேங்காயெண்ணெயின் வரி தொன்னுக்கு 243 ரூபா 75 சதத்திலிருந்து 325 ரூபாவாகவும்—தெங்குப்பிண்ணாக்கின்வரி தொன்னுக்கு 100 ரூபாவிலிருந்து 200 ரூபாவாகவும் — மிளகின்வரி றாத்தலுக்கு 2 ரூபாவிலிருந்து 2 ரூபா 50 சதமாகவும் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இன்னும் கொக்கோவாவுக்கு றாத்தலுக்கு 25 சதவீதமும், ஏலக்காய்க்கு றாத்தலுக்கு 2 ரூபா வீதமும் புதியவரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தவரியேற்றத்தாலும், புதியவரிகளாலும் இம்மாசம் 15-ந்திகதி முதல் வருகிறபுரட்டாசி மாதம் 30-ந்திகதிவரையில் நமது அரசினருக்கு 5 கோடியே 23 லட்சம் ரூபா மேலதிகவருமானம் கிடைக்கவிருக்கிறது. இந்தவீதப்படி ஒருவருடத்துக்குக் கிடைக்கும் வருமானம் 10 கோடி ரூபா. இந்தவிளைபொருட்களின் விலைகள் அதிகம் உயர்ந்திருப்பதே வரியேற்றத்துக்கும், புதியவரிகளுக்கும் காரணமாகும்.

—ஜேர்மனியிலுள்ள அதிகம்வயது சென்ற குருத்துவமாணவர் வண. புறானே பெர்ரோஸ்காஎன்பவரேயாம். உயர்தரகலாசாலைஒன்றிலே முன்னர் ஓர் ஆசிரியராயிருந்தவரும், 70 வயசுடையவருமான இவர் படர்போண நகரிலே வருகிறமாதம் குருத்துவாபிஷேகம் செய்யப்படவிருக்கின்றார்.

—ஸ்கொட்லாந்திலே பெய்லீஸ்ரன்நகர்வாசியும், பாரம்பரையான ஐரிஷ்நடனத்திலே அநேகவெற்றிச்சின்னங்களும், பரிசில்களும் பெற்றுள்ளவளுமான செல்வி பிலோமினா விஞ்ச் எனும்மாது ஓர்கன்னியாஸ்திரியாக ஆசித்து டிரோகெடா எனுமிடத்து மரியாயின் வைத்திய மிஷனரிய கன்னிகாசபையில் சேர்ந்திருக்கின்றாள்.

—உலகின் மகாவிலையேறப்பெற்ற மோட்டர்காரைத் தற்போது சொந்தமாகக் கொண்டிருப்பவர் டெற்ரோயிட்நகர கார்உற்பத்தியாளாது கம்பெனிஒன்றின் பிரதமநிர்மாணியான திரு. ஹார்லி ஏள் என்பவரே. இதனைக்கட்டிமுடிக்க ஏற்பட்டுள்ளசெலவு 46 லட்சத்து 60 ஆயிரம் ரூபா. இதனைக்கட்ட இருவருடஞ்சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**பங்குனிமாதம் 1951**

| | | | |
|---|---|---|---|
| வெ | 30 | அர்ச். ஙிளிமக்கருளப்பர் | (வெ) |
| சனி | 31 | அர்ச். பல்பினம்மாள் | (வெ) |

**சித்திரைமாதம் 1951**

| | | | |
|---|---|---|---|
| ஞா | 1 | தவளோற்சவ ஞாயிறு—அர்ச். ஊகோணப்பர் | (வெ) |
| திங் | 2 | தேவமாதாவுக்கு மங்களம் சொன்னதிருநாள் | (வெ) |
| செ | 3 | அர்ச். அகப்பம்மாள் | (வெ) |
| புத | 4 | அர்ச். இசிதோர் | (வெ) |
| வியா | 5 | விஞ்சேந்திய பெறி. | (வெ) |


# சத்தியவேத பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
பங்குனி மாதம் 29-ந் திகதி


## புதியகுருப்பிரசாதி

ஆத்துமங்களை இரட்சிப்பதாகிய அதியுந்நத அலுவல் சம்மனசுகளிடம்அல்ல, ஆனல் மனிதரிடமே அதாவது குருமாரிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனல், குருமாரின் அலுவல் தெய்வீக அலுவல். அழியாத ஆத்துமங்களை ஈடேற்றிப் பரகதிகொண்டுபோய்ச் சேர்க்கும் பரமஅலுவல். குருமார் நித்தியஉந்நதகுருவுடன் ஒன்றித்து, தேவசெம்மறிப்புருவையை ஒப்புக்கொடுத்து, பரகதிக்கும் பூமிக்கும் மத்தியில் நின்று மகத்தானகொடைகளை நமக்குப் பெற்றுக்கொடுக்கிருர்கள். சர்வேசுரனின் பிரதிநிதிகளாயிருந்து தேவநேசத்தை எமதுஇருதயங்களிலேமூட்டிவிடுகிருர்கள். யேசுக்கிறீஸ்துநாதரின் சுவிசேஷத்தை எமக்குப் போதிக்கிருர்கள். எமது பாவங்களிலிருந்து எம்மை விடுவிக்கிருர்கள். தேவநற்கருணைவழியாக ஆண்டவரின் திருச்சரீரத்தைஆத்துமபோசனமாகஎமக்கு அருளுகிருர்கள். தங்கள் உடல்பொருள் ஆவிமூன்றையும் எமக்கேஅர்ப்பணஞ்செய்து எமது இன்பத்திலும் துன்பத்திலும் அன்புமிக்கதந்தையர்போலிருந்து அல்லும்பகலும்எமதுநல்வாழ்விலேயே அதிகம் கருத்தாயிருந்து வருகிருர்கள். இவ்வாருக எமது ஞானஆயர்களான குருமார் எமக்குச் செய்துவரும் இகபரநலன்களோ இம்மட்டன்று. ஆதலால், நாம்அவர்களின்மகத்தான பதவியை நன்குணர்ந்து அவர்களைச் சங்கித்து அவர்கள்பால் எப்போதும் நன்றியறிதலுள்ளவர்களாய் இருந்து வரவேண்டும். அவர்கள்தங்கள் குருத்துவதொண்டுகளைத்தகுந்தவிதமாய் நடாத்திவந்து அர்ச்சியசிஷ்டகுருமாராய் விளங்குமாறு அவர்களுக்காகத் தினமும் மன்ருடிவருவது எம்மனைவர்மேலும்சுமந்த ஓர்பாரமான கடமையாகும்.

நிற்க, நம்மேற்றிராணியாண்டவர் இம்மாதம் 16-ந் திகதி வெள்ளிக்கிழமைகாலை குருமார்புடைசூழ ஆசனக்கோவிலுக்கு எழுந்தருளித் தமதுதிருக்கரங்களாலே முதன்முதலாக வண. பெனடிக்ற் சூசைப்பிள்ளை விறதருக்குக் குருப்பட்டமென்னும் திருப்பட்டம் அருளலாயினர். அச்சுபதருணம் ஆலயத்திலே புதியகுருப்பிரசாதியின் தாயாரும், இனசனரும், ஊரவரும், ஏனையோரும் திரளாகச் சமூகமாயிருந்து, அருட்சிக்குரியவிதமாய் ஆங்குநிகழ்ந்த திருச்சடங்குகளைப் பத்திப்பரவசத்துடன் கண்டுகளித்தார்கள். அபிஷேகம்முடிந்ததும் ஆண்டவர்அவர்கள் புதியகுரவர்சமேதராய்த் தமதுமாளிகைசேர்ந்து குருமார் பலரும் கூடியிருந்த சமூகத்திலே அவருக்குச் சோபனங்கூறியபோது: தமதுஞானஆட்சியிலே முதலாவது குருவானவரைத் தாம்அபிஷேகஞ்செய்துவைத்ததில் தமக்குண்டான அகமகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார். குருமார் அருந்தலாயிருக்கும் இக்காலத்திலே ஓர்புதிய குருவானவரைக் கண்டுகொண்டது தமதுநல்லதிர்ஷ்டமேயென அறிவித்துநின்ருர். அன்று நிகழ்ந்த அபிஷேகத் திருச்சடங்குகளைக்கொண்டு குருவானவரின்கடமைகளைத் தெளிவாக எடுத்துக்காட்டினர். அக்கடமைகளை ஏனையகுருமாரும் நினைவுகூரத்தகும் அரியதோர்சந்தர்ப்பம் அதுவாகுமென்பதை ஞாபகத்துக்குக்கொணர்ந்து ஆசிவழங்கினர். அதன்மேல் புதியகுரவரின்தாயாரும், இனசனரும், பிறரும்அவரைச்சந்தித்து, அவரின் அபிஷேகிக்கப்பெற்ற திருக்கரங்களை முத்தமிட்டு ஆசிபெற்றுக்கொண்டார்கள்.

புதிய குருப்பிரசாதியான வண. பெனடிக்ற் சூசைப்பிள்ளை சுவாமியார் கரம்பனைத் தமது ஜனனபதியாகக் கொண்டவர். சுருவில்விதானையாராக விளங்கியிருந்து இளைப்பாறியவரான ஸ்ரீ. எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்களினதும், யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க பாடசாலைகளின் ஜெனறல் மனேஜரான வண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம்சுவாமியாரின் தந்தையாராகிய ஸ்ரீ எஸ். தோமிஸ்பிள்ளை அவர்களினதும் சகோதரரான காலஞ்சென்ற ஸ்ரீ எஸ். பெனடிக்ற் முத்தையா அவர்களின் செல்வப்புதல்வர். வவுனியாக கட்டளைக்குரவரான வண. எஸ். பி. அல்பிறெட் சுவாமியாரும், இளவாலை சென் என்றீஸ்கல்லூரி அதிபரானவண. பி. ஜே. சீவரத்தினம் சுவாமியாரும் இவரின் சுற்றத்தவராவர். இப்புதியகுரவர் யாழ்ப்பாணத்திருச்சபை உத்தியானத்திலே தேவதோத்திர வாஞ்சையோடும், ஆன்ம இரட்சணிய அபேட்சையோடும் நெடுங்காலம் உழைத்துவரக் கருணைநிதியான சருவேசுரன் திருவருள் பாலிப்பாராக!

### பிரதமழுப்பருக்கு வரவேற்பு

ஆசனக்கோவில் பிரதமமூப்பரான செவாலியர் டக்றர் சென் ஜோண் புவிராஜசிங்கஅவர்கள் பரிசுத்த பாப்பரசராலே நைற்பட்டம்வழங்கிச் சந்மானிக்கப்பெற்றதையிட்டு அவரைக் கௌரவிக்கும்முகமாகச் சித்திரை 1-ந் திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் ஆசனக்கோவிலைச் சேர்ந்த மூப்புமாரும், கிறீஸ்தவர்களும் அக்கோவில் மைதானத்திலே அவருக்கு ஓர் வரவேற்புஉபசாரம் நடத்தவிருக்கிருர்களென அறிகின்ருேம்.

## நைற்பட்டதாரண மங்கலவிழா

பரிசுத்த பாப்பரசராலே அர்ச். பெரிய கிறகோரியாரின் நைற்பட்டம்அளித்து வெகுமானிக்கப்பெற்றவர்களான செவாலியர் சேர் சிற்றம்பலம்காடினர், செவாலியர் லையனல் வஸ்தியாமபிள்ளை இம்மனுவேல், செவாலியர் டக்றர் சென்ஜோண் புவிராஜசிங்க என்னும் கத்தோலிக்க தமிழ்ப்பிரமுகர்கள் மூவருக்கும் சென்ற 27-ந் திகதி செவ்வாயன்று அம்மகிமைப்பட்டத்துக்குரியசின்னங்களை நம் மேற்றிராணியாண்டவர் அவர்கள் வழங்கியபோது, சரித்திரப் பெருமைவாய்ந்த பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே மனவருட்சிக்குரிய மற்றுமோர் சரித்திரபூர்வமான திருவைபவம் நிகழலாயிற்று. அன்றுபிற்பகல் 5 மணியளவில் மேற்றிராசனமாளிகையிலிருந்து குருத்துவ மாணவர்களும, குருமார் நாற்பதின்மரும் அணிவகுத்து முன்செல்ல, மற்ருேர் நைற்பட்டவர்த்தனரான செவாலியர் எஸ். அருளானந்தம்அவர்கள் சமேதராய்ப் புதிய நைற்பட்டவர்த்தனர் மூவரும் தங்கள்பதவிக்குரிய அலங்கிர்த உடைகளுடன் செல்ல, அவர்களைத்தொடர்ந்து அசாவா நகரின் மகிமைமாத்திரையான மேற்றிராணியாரும், பாப்பரசர் சிம்மாசன மகிமைக்காப்பாளருமான மகாவந். ஜே. ஏ. கியோமார்ஆண்டவரும், யாழ்ப்பாண மேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரும் பெரிதும் ஆடம்பர பவனியாய் ஆலயமணிகள் ஆர்ப்பரிக்க ஆசனக்கோவிலையடைந்தபோது, பிரபலஸ்தர்களும, பெண்மணிகளுமாகத் தேங்கியிருந்த பெருஞ்சனத்திரளாலே அக்கோவில் அளித்துநின்ற காட்சியோ பெரும்மாட்சியுடைத்தாயிருந்தது. மேற்றிராணிமார்இருவரும், நைற்பட்டவர்த்தனர்நால்வரும் பலிபீடஸ்தானத்துள் ஆசனம்வகித்ததும், பாடகர்குழாம் இனியகீதங்கள்பாடியது.

அதன்மேல் மூவருக்கும் அருளப்பெற்ற நைற்பட்டத்துககுரிய அதிகாரப்பத்திரங்களை அவைகள் எழுதப்பட்டிருந்த லத்தீன்பாஷையிலே வண. எம். எஸ். நல்லையா சுவாமியார் முறையே பிரசித்தமாகப் படித்துக்காட்டினர். அவற்றின் ஆங்கிலமொழிபெயர்ப்பை வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியார் முறையே படித்துக்காட்டினர். பின்னர் நம்மேற்றிராணியாண்டவர் ஆசாரியவஸ்திரங்கள்அணிந்து, பட்டமளிப்புத் திருச்சடங்கை நிறைவேற்றித் தமக்குமுன்பாக முழந்தாட்படியிட்டுநின்ற பிரமுகர்கள் மூவர்க்கும் நைற்பட்டத்துக்குரிய சின்னங்களை ஆசீர்வதித்து வழங்கினர். அதனைத்தொடர்ந்து மகாவந். ஜே. ஏ. கியோமார்ஆண்டவர் "தெதேயும்" என்னும் தேவதோத்திரகீதம்பாடித் திவ்விய சற்பிரசாதஆசீர்வாதம் அருளினர். பின்னர் முன்சொன்ன மேரையாய் மேற்றிராசனமாளிகையைநோக்கி ஆடம்பரமாக நடந்தேறிய அழகியபவனியின்போது, நைற்பட்டவர்த்தனர் நால்வர்களும் தங்கள் பதவிக்குரிய சின்னங்கள் மார்பிற்துலங்க, கரத்திலே பட்டயங்கள் பளீரிட்டிலங்க, திருச்சபையின் வீரர்திலகங்களென அணிநடைவிளங்கச் சென்ற காட்சியோ செப்புந்தரமன்று.

பிந்த 6 மணிக்கு யாழ்ப்பாண நகரமண்டபத்திலே புதியபட்டவர்த்தனர்களுக்குப் பகிரங்க வரவேற்பு உபசாரம் ஒன்று பெருமிதமாக நடைபெற்றது. அவ்வேளை யாழ்ப்பாணத்தின் நாலுபகுதிகளிலிருந்தும், கொழும்புமுதலாம் பிறவிடங்களிலிருந்தும் சமயபேதமில்லாது வந்துகூடிய பிரமுகர்களும், பெண்மணிகளும், பிறருமான மாபெருஞ்சனத்திரளால் நிறைந்து, மின்சாரதீபங்களால் பொலிந்து, தேசோமயமாய் மிளிர்ந்த அம்மகாமண்டபம் ஓர் மகாராஜனின் அத்தானிமண்டபம்போல் திகழ்ந்தது. நாதசுரவாத்தியம் இன்பகரமாக இசைத்துக்கொண்டிருந்தது. லகுபான சிற்றுண்டி உபசரணையாலே எங்கும் பரிமளித்துக்கொண்டிருந்தது.

ஆசனக்சோவிலிலும், நகரமண்டபத்திலும் பிரஸ்தாபமாக நடந்தேறிய இருவிழாக்களும் யாழ்ப்பாணமேற்றிராசன ஐக்கியசங்கத்தின் ஆதரவில் நிகழ்ந்தனவாகலின் அச்சங்கதலைவரான அப்புக்காத்து வி. யோசவ் அவர்கள் மகிமைப்பட்டதாரிகள் மூவரையும் அன்பாகவரவேற்றுச் சிலபேசிச் சங்க அழைப்பின்பேரிலே அங்குசமூகந்தந்த அனைவர்க்கும் நன்றித்துதி கூறினர். அவரைத்தொடர்ந்து வடமாகாண ஏஜன்றரான திரு. பி. ஜே. ஹட்சன் துரையவர்கள் எழுந்து, பட்டதாரிகளின் சமய, சமூகசேவைகளையும், கத்தோலிகததிருச்சபையின் சிறந்த பாரம்பரியங்களையும், அது கீர்த்திவாய்ந்த தனது மக்களுக்குக் கௌரவபட்டங்கள் வழங்கிவரும் காரணங்களையும் எடுத்துக்காட்டிச் சிறந்ததோர் சொற்பொழிவாற்றி மூவருக்கும் சோபனங்கூறியதும் பாப்பரசர் வாழ்த்துக் கீதத்துடன் வரவேற்புவிழா இனிதே நிறைவாயிற்று.

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 30-ந்தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் நடைபெறும். சித்திரைமாதம் பின்வரும் தேதிகளில் சகோதரர் பரிபூரணபலன்களை அடைந்துகொள்ளலாம்:— 4, 16, 21, 23, 24, 25, 28(2), 30. நிபந்தனைகள் வழமைபோல. கூட்டத்தின்முன் 4-30 மணிபோல் ஆலோசனைச்சங்கம் நடைபெறும். ஆகையால் ஆலோசனைச் சங்கத்தார் நேரத்தோடு சமூகமாகும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

A. S. FRANCIS OF MARY
for Director

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## கல்லூரி விடுமுறை

சம்பத்திரிசியார்கல்லூரி ஈஸ்றர்விடுமுறை சென்ற 20-ந்திகதி ஆரம்பமாயிற்று. விடுமுறைமுடிந்து மறுபடி வருகிற சித்திரைமாதம் 23-ந்திகதி கல்லூரி ஆரம்பமாகும்.

## பாடசாலை விளையாட்டுப்போட்டி

வடமாகாணச் சுவபாஷா பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி சென்ற 17-ந்திகதி சனிக்கிழமைபிற்பகல் சுண்டிக்குளி சென் ஜோண்ஸ் கல்லூரி மைதானத்திலே உடல்நலக்கல்வி அதிகாரியான டக்றர் எச். எஸ். ஆர். குணவர்த்தனு அவர்கள் தலைமையில் நடந்தேறியது. வலிகாமம்வடக்கு, வலிகாமம்கிழக்கு, வலிகாமம்மேற்கு, யாழ்ப்பாணம, வடமாட்சி, தென்மராட்சிஆகிய பகுதிகளைச்சேர்ந்த சுவபாஷாபாடசாலைகளும், வடமாகாணத்திலுள்ள சிங்களப்பாடசாலைகளும இப்போட்டியில் கலந்துகொண்டன. இதிலே கொழும்புத்துறைக் கத்தோலிக்கபாடசாலையானது மாணவர் கோஷ்டியில் முதல்வெற்றியும், மாணவர் - மாணவிகள்கோஷ்டியில் இரண்டாவதுவெற்றியும் பெற்றிருப்பதாக அறிந்து சந்தோஷமானேம்.

## மரியாயின்சேனை மகாநாடு

அகிலஇலங்கை மரியாயின் சேனை மகாநாடொன்றைநடத்த இலங்கையிலுள்ள மரியாயின்சேனைச் செனற்சபை தீர்மானித்திருக்கிறது. வருகிற வைகாசிமாதம் 20-ந் திகதி மருதமடுத் திருப்பதியிலே இந்தமகாநாடு நடந்தேறும். மரியாயின்சேனையில் சேவை செய்கிறவர்கள் மாத்திரமே இதில் கலந்துகொள்வார்கள். இந்தியா, பர்மா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குரிய மரியாயின்சேனைப் பிரதிநிதியான பிறதர் நோர்மன் அவர்கள் இம்மகாநாட்டில் விசேஷபங்கு எடுத்துக்கொள்வாரெனத் தெரியவருகிறது. இந்திய மரியாயின்சேனைச் செனற்சபைத் தலைவி சிஸ்றர் துரைராஜ்அவர்கள் மகாநாட்டுத் தமிழ்விவாதங்களிற் கலந்துகொள்வாரெனத் தெரியவருகிறது.

## சிவிலுத்தியோக பரீட்சை

சிலமாசங்களின்முன்னர் நடந்தேறிய இலங்கைச் சிவிலுத்தியோக பரீட்சைக்குச் சென்றுருள் ஐவர் அரங்கேறியிருக்கின்றனர். இவர்களில் தமிழர் மூவர். இலங்கைச்சர்வகலாசாலையிலே பொருளாதார போதகாசிரியாக இருந்துவருகிறவரான திரு. ஏ. அருட்பிரகாசம், பி. ஏ. அவர்களும், சம்பத்திரிசியார்கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. என். பற்றிக் ஜெகநாதன், பி. ஏ. அவர்களும், கொழும்பு சென்யோசெவ் கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. ஏ. அமிர்தநாயகம், பி. ஏ. அவர்களுமே அம்மூவருமாவர். திரு. அருட்பிரகாசம்அவர்கள் டக்றர் எஸ். அருட்பிரகாசம் அவர்களின் புதல்வர். திரு. ஜெகநாதன்அவர்கள், மிருசுவில்வாசரும், யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்கபாடசாலைகளில் ஆசிரியத் தொண்டாற்றித் தற்போது இளைப்பாறியிருப்பவருமான திரு. என். நீக்கிலாப்பிள்ளை முத்தையா அவர்களின் புதல்வர். திரு. அமிர்தநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்திலே நீதிப்பரிபாலன வைத்தியஅதிகாரியான டக்றர் ஜி. அமிர்தநாயகம் அவர்களின் புத்திரரும், பிரபல மணியகாரராயிருந்து காலஞ்சென்ற ஜே. என். சந்திரசேகர முதலியாரின் பௌத்திரருமாவர். இவர்களுக்கு நம்சோபனவாழ்த்து உரித்தாகுக.

## மற்றோர் திருயாத்திரை

அரசாங்க சேர்வேப்பகுதிக் கத்தோலிக்கசங்கம் லஹக்கோட்டையிலுள்ள சரித்திரப்பிரசித்திபெற்ற அர்ச். அந்தோனியாரின் திருஷேத்திரத்துக்குக் கத்தோலிக்கரின் திருயாத்திரைஒன்றை நடத்த ஒழுங்கு செய்திருந்தது. ஆனால், ஈஸ்றர்விடுமுறைநாட்களுடன் சேர்த்துத் தங்கள் லீவுநாட்களையும் கழித்துக்கொள்ளும் நோக்கத்துடன் தத்தமூர்களுக்குச் சென்றிருந்த அதிகாரிகளும் கலந்துகொள்ளத்தக்கதாக இந்தவிசேஷ யாத்திரை சித்திரைமாதம் 7-ம் 8-ம் திகதிகளுக்குப் பின்போடப்பட்டிருக்கிறது. சித்திரைமாதம் 7-ந்திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்குக் கொழும்பிலே கோட்டைறெயில் வேஸ்ரேஷனிலிருந்து இந்தயாத்திரை ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இருகன்றுகளை ஈன்றபசு

புலோலி மேற்கைச்சேர்ந்த தம்பிப்பிள்ளை என்பவருடைய வீட்டில் ஒரு பசு சிலதினங்களுக்குமுன் ஏககாலத்தில் இரண்டுகன்றுகளை ஈன்றது. கன்றுகள்இரண்டும சுகமாக வாழுகின்றன. இரண்டுதினங்களுக்குமுன் வதிரியிலும் ஒருவருடையவீட்டில் ஒரு பசு இரண்டு கன்றுகளை ஈன்றதாக அறியப்படுகிறது.

## வரியேற்றமும் வாழ்க்கையும்

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் தேயிலை, றப்பர் ஆகியாம் விளைபொருட்களின் வரியேற்றத்தாலும், மற்றும் புதியவரிகளாலும் நமது அரசினருக்குக் கிடைக்கவிருக்கும் மேலதிகவருமானத்தை இலங்கையிலே தற்போதைய உயர்ந்துகொண்டுவரும் வாழ்க்கைச்செலவைக்குறைக்க எவ்வாறு சிறந்தவகையிலே உபயோகிக்கலாம் என்பதுபற்றி ஆலோசித்து அறிக்கையிடுமாறு உள்நாட்டுமந்திரியார் சேர் ஒலிவர் குணதிலக, உணவுமந்திரியார் திரு. ஏ. இரத்நாயக, நிதிமந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஆகிய மந்திரிமார் மூவரையுங்கொண்ட ஓர் உபசமமிற்றியை மந்திரிசபை நியமித்திருக்கிறது.

# பரிசுத்தவருட வினுவிடைகள்

(முன்தொடர்ச்சி)

7. 1950-ம் ஆண்டின் பரிசுத்தவருடம் அதிகாரமுறையில் அகிலஉலகத்துக்கும் நீடிக்கச் செய்துவிடப்பட்டிருக்கின்றதா?

ஆம். பரிசுத்தஸ்தானத்தின் ஓர் விசேஷ நிருபத்தின்மூலம் 1951-ம்ஆண்டு தை 1-ம் திகதி தொடக்கம் மார்கழி 31-ம்திகதி வரையும் திருச்சபைஅடங்கலும் நீடிக்கச்செய்து விடப்பட்டிருக்கின்றது.

8. 1951-ம்ஆண்டில் யூபிலிப்பலனை அடைவதற்கு நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகள் எவை?

பின்வரும் நான்குநிபந்தனைகளையும் நிறைவேற்றவேண்டியது அவசியமாகும்.

(1) நல்ல பாவசங்கீர்த்தனம்
(2) திவ்வியநற்கருணை உட்கொள்ளுதல்.
(3) அந்தந்த இடத்திற்கெனக் குறிக்கப்பட்ட கோவில்களைச் சந்தித்தல்.
(4) கீழ்க்காணும் செபங்களைச் சொல்லுதல்.
ஐந்துமுறை பர. பிரி. திரி. ஒருமுறைபர. பிரி. திரி. (பரிசுத்த பாப்பானவரின் கருத்துகளுக்காக). விசுவாச மந்திரம். மூன்று பிரியதத்த மந்திரம். ஒருமுறை சமாதானத்தின் இராக்கினியே எ. வே. கிருபைதயாபத்து மந்திரம்.

(இந்தச்செபங்களுடன் பரிசுத்தபாப்பானவரால் பரிசுத்தவருடத்திற்கென இயற்றப்பட்ட விசேஷசெபத்தையும் சொல்லலாம்.)

9. யூபிலிப்பலனை ஒருமுறைக்குமேல் அடையமுடியுமா?

விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றும் ஒவ்வொருமுறையும், எத்தனை முறையாயிருந்தாலும் அடையலாம்.

புத்தகமதிப்புரை

# அன்பின் அழைப்பு

அல்லது

சங். ஜோசப்பா மெனண்டஸ்

சகோதரிமூலமாய் வெளியிடப்பட்ட

## யேசுவின் திருஇருதயச்செய்திகள்

ஆக்கியோன் :— சங். சூசைஅடிகள். பிரசுரம்: தே நொபிலி அச்சகம், மதுரை. 282 பக்கங்கொண்டது. விலை பிரதி ஒன்று சாதாரணகட்டு ரூபா 1 அணு 12. கலிக்கோக்கட்டு ரூபா 2 அணு 4.

கிடைக்குமிடம்: தலைவர், தே நொபிலி அச்சகம், மதுரை.

1938-ம்ஆண்டு "அன்பின் அழைப்பு" என்றநாமத்துடன் ஓர்சிறு புத்தகம் ஸ்பானியபாஷையில் வெளிவரலாயிற்று. இதுயுத்தஆரம்பத்தில் வெளிவந்தபோதிலும் கத்தோலிக்க உலகமெங்கும் மிகவிரைவில் பரவஆரம்பித்துச் சிலமாதங்களுள் பிராஞ்சிய, ஆங்கில, இத்தாலிய, போர்த்துக்கேய, சீனமுதலிய அநேகபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்த"அன்பின்அழைப்பு" எனும் சிறியநூலையே "அன்பின் அருங்குரல்" எனும் அழகியநாமத்துடன் தமிழ்மொழியிலே சிலகாலத்தின்முன் இசைத்துத்தந்தார், தூத்துக்குடி, வண. ஜே. எம். நிக்கொலாஸ் சுவாமிகள். இதனை நாம் இடையிடையே படித்து நன்கு ரசித்தும், அதிற்சிலபகுதிகளைப் "பாதுகாவல"னில் அன்பர்கள்படித்து ரசிக்கும்படியாகப் பெயர்த்து வெளியிட்டும், இந்நூல் தமிழ்மொழியில் விரிவாக வெளிவந்தாலோஎனப் பலமுறையும்ஆசித்தும்வாலோனேம். தற்போது "அன்பின் அழைப்பு" எனும் இந்த நூல் வெளிவந்து நமதுஆவலைப்பூர்த்திசெய்திருக்கிறது.

இதன் முகவுரையில் எழுதப்பட்டிருப்பதும் நாம்சொல்வதற்குப் போர்த்த சான்றாகும். நமதுஆண்டவர் சங். ஜோசப்பா மெனண்டஸ் சகோதரிமூலமாக உலகுக்குஅறிவித்த "செய்திகளின் முழுவிபரத்தையும்அறிய எங்கும் ஆவல் உண்டானது. அதோடு, அச்செய்திகளை உலகுக்கு அறிவிக்கும் தூதாக நமதாண்டவர் தெரிந்துகொண்ட ஜோசப்பா சகோதரியின் சீவியவரலாறுகளை அறியவும் அநேகர் விரும்பினார்கள். இதனால் 'அன்பின் அழைப்பு'என்ற சிறியபுத்தகம்விரித்து எழுதப்பட்டது." அதனை ஆதாரமாகக் கொண்டே தமிழில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு பாகங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று, ஜோசப்பா சகோதரியின் வாழ்க்கை வரலாறு. மற்றொன்று, யேசுவின் திருஇருதயம் அவள்மூலமாக வெளியிட்டசெய்திகள்.

இந்தஅன்பின் அழைப்பிலே நமது ஆண்டவர் மார்க்கரீத்மரியம்மாள்மூலமாக உலகுக்குஅறிவித்த தமதுஅன்பின்செய்திகளை ஜோசப்பா சகோதரிமூலமாகஉறுதிப்படுத்துகிறூர்எனலாம். ஜோசப்பாவின் சீவியவரலாற்றை ஆராய்வாகப் படிக்குமிடத்து அவள் கொண்ட ஆத்துமஇரட்சணியதாகம் நன்குபுலனாகும். "இங்கே எத்தனை கைக்குட்டைகளிருக்கிறதோ, அத்தனை ஆத்துமாங்கள் மனந்திரும்பினல்" என்றஎண்ணம் அவள் கைக்குட்டைகளை அலசிக்கொண்டிருக்கும்போது உண்டாகிறது. செபத்தில் "ஆண்டவரே, ஆத்துமாக்களை இரட்சிப்பதென்றால் என்ன?" என்று கேட்கிறாள். அவரும் பதில்அளிக்கிறார். தமது இரக்கத்தின் தூதாக ஜோசப்பாவை உபயோகிக்கவிரும்பிய நமதுஆண்டவர் அவள்மூலமாக வெளியிட்ட அன்பின்செய்திகளை, பாடுகளின் இரகசியங்களை, துயரத்தின் பாதையைப் படிக்கும்எவர்தான் மனம்உருகார்? பொருமூச்செறியார்? ஆத்துமஇரட்சணியதாகம் கொள்ளாதிருப்பர்? நமதுபாப்பாசர் 1938-ம்ஆண்டு ஓர் கருதினாலாய்இருந்தபோது, "இந்நூலை வாசிப்பதனால் பாவிகள் யேசுவின்திருஇருதயத்தின் இரக்கப்பெருக்கத்தையும், அணைகடந்தஅன்பையும் அறிந்து அவதைரியத்தையும், அவநம்பிக்கையையும் அறவேஒழித்துத் தளராதநம்பிக்கை கொள்ளுவார்கள்என்பது திண்ணம்"என்று எழுதியிருக்கின்றார். சங். சூசையடிகள் மிகவும் அழகானதமிழிலே, மனமுருகத்தக்க வகையிலே எழுதித்தந்திருக்கும்இந்த அருமையான நூலைக் கத்தோலிக்க தமிழ்மக்கள் அனைவரும் படித்துப் பலனெய்தவேண்டுமென்பதே நமது பேராவலாகும். நமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

## ஓர் கோலவிவாகம்

கரவெட்டி

கரவெட்டிவாசரும், அப்பதியிலுள்ள திருஇருதயகல்லூரி ஆசிரியர்களில்ஒருவருமான ஸ்ரீ எம். சிங்கராசா அவர்களின் ஏகபுதல்வரும், அவிசாவெலைத் தபாற்கந்தோரில் உத்தியோகம்வகித்திருப்பவருமான திருவளர் செல்வன் ஜே. எவ். ஜெயராசா அவர்களுக்கும், ஷிஷர்வாசரும் ஹற்றன் டிஸ்திறிக்கோட் சக்கிடுத்தாருமாகிய ஸ்ரீ எஸ். பி. தேவசகாயம்அவர்களின் ஏகபுதல்வியான திருவளர்செல்வி லில்லிஅன்னி அம்மாவுக்கும் சென்ற 26-ந்திகதி திங்கட்கிழமைகாலை கரவெட்டி அர்ச். அந்தோனியார்கோவிலிலே செவாலியர் சேர் சிற்றம்பலம் காடினர்தம்பதிகளும், மற்றும் இனசனர், சிநேகிதர், ஆசிரியர், பிரபல உத்தியோகஸ்தர்களும பெருந்திரளாகக் குழுமியிருந்த சமூகத்திலே மணவாளியின் பேரனுரான வண. எஸ். ஜி. இல்லறிச்சுவாமியவர்களால் பாணிக்கிரகண மெய்விவாகத்திருச்சடங்கு மங்கலகரமாக நிறைவேறியது. பூசையின்போது சுவாமியவர்கள் இல்லறமாகிய நல்லறத்தைப்பற்றி அரியநன்மதிகள்பல புதுமணத்தம்பதிகளுக்கு இனிதே எடுத்துரைத்து ஆசிகூறினர். பூசையின்பின் மணமக்கள் கோவிலைவிட்டு வெளிகொண்டதும் செவாலியர் சேர் சிற்றம்பலம் காடினர் தம்பதிகளாலும், மற்றும் பிரமுகர்களாலும் நறுமலர்மாலைகள் சூட்டப்பெற்று, அங்குசமூகமானேரெல்லாம் புடைசூழ வாத்தியவரிசைகளுடன் ஊர்வலமாகச்சென்று அழகேமயமாய்விளங்கிய "வில்விஸ்ரான்" எனும் மணமகள்இல்லஞ்சேர்ந்து, பரிமளிப்பான வரவேற்பு அருளப்பெற்றார்கள். அத்தருணம் ஹற்றன் நகரசபைத்தலைவர் அவர்களும், பண்டிதர் ஏ. யோசேப்பு அவர்களும் மணமக்கள் குடும்பங்களின் குலமேன்மை, குடும்பமேன்மை முதலாம் பலமேன்மைகளையும் எடுத்துக்காட்டிப் புதியதம்பதிகளுக்குச் சோபனங்கூறிநின்றார்கள். பலவிடங்களிலிருந்து அநேகவாழ்த்துச் செய்திகள் அன்றுமுழுவதும் வந்தபடியிருந்தன. இப்புதியகுடும்பமானது அஷ்ட ஐஸ்வரியங்களும் பெற்று இனிதேவாழத் திருவருள்பாலிக்குமாறு அமலனதிருவடிகளை இரந்துநிற்கின்றேம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

# உலக சமாதானத்துக்கு ஒத்துழைக்க முன்வருமாறு ஸ்ராலினுக்குச் செய்தி

வாஷிங்ரன்—பங்குனி 19.

1940-ம் ஆண்டுதொடக்கம் அமெரிக்கஐக்கியதேச சனப்பிரதிநிதிகள் சபையில் அங்கம்வகித்துவருகின்ற திருமதி பிரான்ஸஸ் போல்ற்றன் அம்மையார் சோவியற்அரசின் பிரதமர் ஸ்ராலினுக்கு விடுத்துள்ள செய்தியிலே "வெட்டொன்று துண்டிரண்டாக அவ்வளவு கனகச்சிதமாக" உள்ள அமெரிக்காவின் சமாதான நோக்கங்களை உலகெலாம் பரவச்செய்து, இரும்புத்திரையின்றி எல்லாரும் இன்புற்று வாழ வழிசெய்வதில் ஒத்துழைக்கமுன்வரும்படி கோரியுள்ளார். ஹிற்லர், முசோலினி, தோஜோ என்பவர்கள் போன அழிவின்வழி போகவேண்டாம் என்று ஸ்ராலினைத் திருமதி போல்ற்றன் தெளிவாக எச்சரித்திருக்கிறார்.

அவர் இச்செய்தியை அமெரிக்க சனப்பிரதிநிதிகள்சபையில் வெளிநாட்டுக்கொள்கைபற்றி நடந்தவிவாதத்தின்போது வெளியிட்டார். ஸ்ராலினுக்கு விலாசமிடப்பட்ட இச்செய்தியின் முழுவாசகம் பின்வருமாறு: "அமெரிக்க காங்கிரஸ்சபையிலிருந்து உங்களுக்குச்செய்திஅனுப்புவது வழக்கமான நடவடிக்கையினின்றும் சற்றே விலகியிருப்பதாகும். எங்கள்அரசாங்க பகுதி வாஷிங்ரனிலுள்ள தங்கள்ஸ்தானிகர்மூலமாக இதைஅனுப்புவதுதான் சரியானவழி. ஆனால், சிற்சில சந்தர்ப்பங்களில் வழமையானவழியினின்றும் முரண்படுவதைத் தாங்கள்பாராட்டுவது எனக்கு நன்றாகத்தெரியும்.

"எங்கள்அமெரிக்கா உங்கள்ருஷியாவைப்போல் பரந்த பூபாகம்அல்ல. எனினும்அமெரிக்கா பெரியநாடுதான். ஆனால், எங்கள்அரசாங்கத்துக்குஇருக்கிறஇடம்போதும். நாடுபெருக்கவேண்டும்எனும் எண்ணம் அமெரிக்காவுக்குக் கனவில்கூடஇல்லை. மற்றநாடுகளைச் 'சுவாஹ'செய்ய வேண்டுமென்றோ அல்லது ஏகபோகக்கட்டுப்பாடு நடத்தவேண்டுமென்றோ அமெரிக்கா எண்ணவில்லை. மனிதசீவிய சரித்திரத்தைப்பார்த்தால் அமெரிக்கா ஒரு பண்டையதேசமல்ல. ஆனால், கடந்த 165 ஆண்டுகளாக எங்கள்நம்பிக்கைகள், எங்கள் உள்ளக்கிடைக்கைகள், எங்கள்நோக்கங்கள் உலக தலைவர்களுக்குத் தெரிந்திருக்கின்றன.

"எங்கள்லட்சியங்கள் உங்கள் முதாதையருக்குத் தெரியும். உங்களுக்குத்தானென்ன? உங்களுக்கும் தெரியும். எங்கள் தேசியகொள்கைகள் வெட்டொன்று துண்டிரண்டு என்று சொல்லும்படியாக அவ்வளவு கனகச்சிதமாக இருக்கின்றன. எங்கள்கொள்கைகள் நேர்மையும் தெளிவும் நிரம்பியவை. நாங்கள் தெய்வநம்பிக்கை கொண்டவர்கள். ஆண்டவன்படைப்பில் ஆண், பெண் அனைவரும் சமமேஎன்பது எங்கள்திறம்பாத கொள்கை.

"சுகவாழ்வும், சுயேச்சைவாழ்வும் பெற்றிருக்கவேண்டியது மக்கட்குலத்தின் பிறப்புரிமைகளாகும். எல்லோரும் சுதந்திர, சுபீட்சவாழ்வு வாழவேண்டும்என்பதே எங்கள்கொள்கை. ஆளப்படும்மக்களுடைய சம்மதத்திலிருந்தே ஆட்சியாளருக்கு அதிகாரம் கிடைக்கிறதுஎன்பது எங்கள்சித்தாந்தம். "மக்கள் அனைவருக்கும் நன்மைபயக்கும்சட்டத்தில் நாங்கள்நம்பிக்கை வைத்திருக்கிறோம். நீதிப்பரிபாலனத்தை நாங்கள்நம்புகிறவர்கள். நேர்மையானவிசாரணை நடத்தவேண்டும்; ஜூரிகள்சேர்ந்து விசாரணை நடத்தவேண்டும்; அப்படித் தீரவிசாரியாமல் ஒருவருடையஉயிருக்கோ அல்லது உரிமைக்கோ பாதகம்நேரவிடக்கூடாதென மன, மெய், மொழிச் சுயேச்சையில் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்கள்.

"எங்கள் அண்டைஅயலாருக்கு ஒத்தாசைசெய்வதில் நாங்கள் நம்பிக்கை உள்ளவர்கள். உலகநாடுகள் யாவற்றினதும் விடுதலையில் நாங்கள் நம்பிக்கை உள்ளவர்கள். மக்கட்குலம்முழுவதும் நீடித்தசமாதானத்துடன் வாழ்வது சாத்தியம் என நாங்கள் நம்புகிறோம். எங்கள் விடுதலை நம்பிக்கைகள் நிலைபெறும்பொருட்டு நாங்கள் எங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம்செய்துள்ளவர்கள். உங்களுடைய அபிப்பிராயத்தில், ஐயா, இந்தக்கொள்கைகள் நல்லவைகளா? இவற்றில்ஏதாவது பழுது இருக்குமாயின் தயைசெய்து தங்கள்அபிப்பிராயத்தை அமெரிக்கமக்களுக்கு அருளுவீர்களா? சோவியற்ஆட்சியின் அடிப்படைக் கொள்கைகள், அபிலாஷைகள், குறிக்கோள்கள் என்ன? என்பதை உலகறியத் தெளிவாக நீங்கள் எடுத்துரைப்பீர்களாயின் அது மெத்த உபகாரமாயிருக்கும்.

"புதியதொருநாட்டிலே, ஒருசில குடியேற்றநாடுகளிலிருந்து தோன்றி இன்றுஉலகிலே அதிகவல்லமையுடன் திகழும் அமெரிக்கா எவ்வாறு சமுதாயமுன்னேற்றமும், செல்வச்செழிப்பும்அடைந்தது? அதற்குச்சிவாதாரமாயிருக்கின்ற காரணங்கள் அல்லது கொள்கைகள் என்ன? இவற்றை ருஷியமகாசனங்களின்சார்பில் தங்கள் அரசாங்கம் ஆமோதிக்குமாயின், தற்போது உங்கள்நாட்டிற்கும் — ஏனைய சுதந்திர நாட்டவர்க்குமிடையே பெருகிக்கொண்டேவருகின்ற நெருக்கடியைத் தவிர்த்தவர்களாவீர்.

"உங்களுக்கு மகத்தான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. உங்கள்நாட்டை, உங்கள்நாட்டவரை நிலையான அமைதிதரும்பும் சீரியவிடுதலை வாழ்வுக்கு அழைத்துச்செல்லுவீர்களா? அல்லது சுதந்திரஉலகிற்கு விரோதமாக அழிவுப்போர்தொடுத்துத் தங்கள்நாட்டை வெறுத்தொதுக்கச்செய்வதும், தங்கள் நாட்டவரைப் படுகுழியிற் தள்ளுவதுமான போரைத்தொடுத்து அதன்விளைவாக அதிகாரமிழந்து அந்தகாரத்திற் சிக்கி மறையப்போகிறீர்களா? சமாதானத்தையும், சனுபிமானத்தையும் தேர்ந்தெடுப்பீர்களாயின், அதன்பயனாக அமெரிக்காஉள்ளிட்ட சுதந்திர உலகம்முழுதும் உங்களுக்குப் பூரண ஒத்துழைப்பை அளிக்கும். அதனால், ருஷிய மக்களுக்கு அளப்பரிய அநுகூலங்களைக் கிடைக்கச் செய்வீர்கள். வையகம்முழுவதிலும் மக்கட் குலம் அனைத்திற்கும் வாழ்க்கையில் இன்பம் சுரக்கும். இது வேண்டுமா? அல்லது......

"சுதந்திரஉலகிற்கு விரோதமாகச் சண்டையில்இறங்கத் தீர்மானிப்பீர்களாயின், வலிமைமிகுந்த அமெரிக்கா உள்ளிட்ட சுதந்திரஉலகின் கோபக் கொதிப்பில் தாங்களும், தங்கள்நாடும் தவிக்கநேரிடும். சுதந்திர உணர்ச்சியில் ஊறி உரம்பெற்ற ஐக்கியஅமெரிக்காவானது சுதந்திரவாழ்க்கைமுறை அஸ்தமித்துப்போகும்படி ஒருநாளும் விடவேவிடாது. எங்கள் அமெரிக்க மக்கள் மதசுதந்திரம், பேச்சுச்சுதந்திரம், பத்திரிகைசுதந்திரம், நடமாட்ட சுதந்திரம், அபிப்பிராயங்கூறும் சுதந்திரம்முதலிய அடிப்படைச்சுதந்திரங்கள்யாவும் பெற்றிருக்கிறார்கள். இது தாங்கள்அறிந்ததே.

"எங்கள்நாட்டின் எதிர்காலசம்பந்தமுள்ள ஒவ்வொரு முக்கிய அலுவலும் அமெரிக்க மகாசனங்களால் சாங்கோபாங்கமாக விவாதிக்கப்படுகிறது. அப்போது பலத்த வாதப் பிரதிவாதங்கள் எழுகின்றன. அபிப்பிராய பேதங்கள் வெளியாகின்றன. சில சமயங்களில் மக்கள் கட்சிசேருகிறார்கள். அரசினரின்காரியம் மக்களின்காரியம். எனவே,

அமெரிக்கஅரசினரின்காரியம் அமெரிக்கமக்களால் விரிவாக எல்லாவிடங்களிலும் பரிசீலனை செய்யப்படுகிறது.

"மக்களின்விவாதம் அமெரிக்காவில் சகசம். அபிப்பிராயபேதங்களைப் பிரமாதமாகப் பெரிதுபடுத்திக்கொண்டு தாங்கள் தப்பர்த்தம் செய்துகொண்டுவிடவேண்டாம். சோதனை நிரம்பிய இந்தக்காலத்தில் ருஷியமக்களின் நல்லெண்ணத்தையும், நன்மதிப்பையும் சம்பாதித்துக்கொள்வதும், அல்லது அவர்கள்கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாவதும் உங்களதுபொறுப்பு. அகிலஉலகின் போற்றுதலுக்கு ஆளாகிச் சுதந்திரமும், சமாதானமும் நீடூழிகாலம் நிலவச்செய்வதில் தங்களுக்கு விருப்பமா? அல்லது ஹிற்லர், முசோலினி, தோஜோ என்பவர்கள் போன அழிவின்பாதையிலேபோய் மாந்தர்குலத்தின் தீராப்பகைக்கு ஆளாக விருப்பமா? இரண்டிலொன்றை முடிவுகட்டுவது உங்கள் பொறுப்பு. நேர்மையான பாதையைத் தென்படுத்த இறைவன் தங்களுக்கு அருள் புரிவானாக! தங்கள்தீர்மானம் உலகில் எங்கும் ஆனந்தம்பொங்கச் செய்வதாக! சமாதானமே தங்கள் நாட்டமாக இருப்பதாக!

(யூஸிஸ்)

# வாசிப்பதினால் * * பசிதீருமா?

தேவனையும், தேவகாரியங்களையும மேன்மேலும் அறிவதற்குள்ள உத்தம உபாயங்களில் ஒன்று நல்லபுத்தகங்களை நன்மனமாய், மீண்டும் மீண்டும் கவனமாய் வாசித்து யோசித்தலாம். அர்ச். சின்னப்பர் தமது அரியசீஷனாகிய திமொத்தேயுக்கு எழுதிய முதல் நிருபத்தில் "நான்வருமளவும் வாசிக்கிறதிலும், புத்திசொல்லுகிறதிலும், உபதேசிக்கிறதிலும் சாக்கிரதையாயிரும்" என்று அறிவித்தார். "செபம்பண்ணும்போது நாம் சருவேசுரனோடு சம்பாஷிக்கிறோம். ஞானபுத்தகங்களை வாசிக்கும்போது சர்வேசுரன் நம்மோடுபேசுகிறார்" என்று அர்ச். அகுஸ்தீன் சொல்லுகிறார். பெரும் பாவியாயிருந்தஇவர் மனந்திரும்பமுன் உலககல்வி இல்லாதவரான அர்ச் அந்தோனியாரின் ஆச்சரியமான சீவியத்தைப்பற்றிக் கேள்விப்பட்டபோது, "இந்தப் பேதைமனுஷர் பரலோக இராச்சியத்தைப் பலவந்தமாய்ப்பறிக்க நாங்கள் எங்கள்லௌகீகஞானம்அனைத்தோடும் பாவச்சேற்றில் கிடந்துழலுகிறோமே" என்று சொல்லிக்கொண்டு வெளியேபோய் என்ன செய்யவேண்டும் என்று தெரியாது மனங்கலங்கிக் கொண்டிருந்தார். அப்போது "எடுத்துவாசி, எடுத்துவாசி" என்று ஒரு சப்தங்கேட்டது.

அங்கு எவரும் இல்லாததால் அது தேவஏவுதலாய்இருக்கவேண்டுமென்று எண்ணி அறைக்குள்போய் ஒரு புத்தகத்தை எடுத்துத்திறந்தபோது, பின்வரும்வசனம் முதன்முதலாகக் கண்ணுக்கெதிர்ப்பட்டது. "விருந்தாடுவதிலும், குடிவெறியிலும்அல்ல, காமப்படுக்கைகளிலும், வேசைமார்க்கங்களிலும்அல்ல, வாக்குவாதத்திலும் பொருமையிலும்அல்ல, ஆனால், நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்து நாதரைத் தரித்துக்கொண்டுசரீரப்பேணுதலால் துர்இச்சைகளுக்கு வழிபண்ணாதிருந்து பகலிலேநடக்கிறவர்களைப் போல யோக்கியமாய் நடந்துகொள்ளக்கடவோம்" (றோமர் 13. 13—14.) இதற்குமேல் தாம் வாசிக்கவுமில்லை; வாசிக்கவேண்டியதாய்இருக்கவுமில்லை; இவ்வசனமுடிவில் தமதுஇருதயத்திற் சமாதானத்தின் ஒளிவீச, சந்தேகத்தின் இருளெல்லாம் மறைந்துபோனது என்று அவர் எழுதியிருக்கிறார். எத்தனையோ பிறசமயத்தவர்கள் நல்ல புத்தகங்களை வாசித்ததினாலேயே மனந்திரும்பிச் சத்தியவேதத்திற் சேர்ந்தார்களென்று சரித்திரங்களிலும், பத்திரிகைகளிலும் வாசிக்கிறோம்.

அங்கிளிக்கன்சபை மேற்றிராணியாராயிருந்த ஊல்வ்என்பவர் அர்ச். சவேரியாரின் சரித்திரத்தை வாசித்ததின்பயனாக உலக உத்தியோகங்களைப் புறக்கணித்துத் தேவதொண்டில் அமர்ந்தார். சியன்னாவில் நகரஅதிகாரியாயிருந்து, பிற்காலம் பெரிய அர்ச்சியசிஷ்டரான கொலம்பானுஸ் அருளப்பர் வேதவிஷயத்தில் வேண்டாவெறுப்பாய் இருந்தகாலத்தில் ஒருநாள் வெள்ளெனவீட்டுக்குவந்தபோது தீன் முற்றாய் முடியாததால் அவர் மனைவி ஒரு புத்தகத்தைக் கொடுத்துத் தீன்முடியுமட்டும் அதைச் சற்றுநேரம் வாசிக்கும்படி கேட்டாள். வாசிப்பதினால் பசிதீருமா? என்றாற்போல அவர் புத்தகத்தைச் சுழற்றி எறிந்துவிட்டார். என்றாலும் மனைவி அதிகந்துக்கப்படாதபடி, புத்தகத்தைஎடுத்து விரித்தபோது பெரும்பாவியாயிருந்து மனந்திரும்பின எஜிப்து இராச்சியத்தின் அர்ச். மரியம்மாள் சரித்திரம் எதிர்ப்பட்டது. அதை வாசிக்கவாசிக்க அவர்மனநிலை முற்றாய் மாறியதால் தமது லௌகீக நடபடியை முற்றாய் மாற்றிக் கடுந்தபசுசெய்து புண்ணிய வழியில்நடந்து பெரிய அர்ச்சியசிஷ்டரானார். உலகில் பெரும்நன்மை செய்துவரும் யேசுசபையை ஸ்தாபித்தவரான அர்ச். இஞ்ஞாசியார் ஆஸ்பத்திரியில் வருத்தமாயிருந்தபோது அர்ச்சியசிஷ்டர்களின்சரித்திரத்தை வாசித்ததின்பயனாக உலகத்தைத்துறந்து தேவஊழியத்தில் அமர்ந்து அச்சபையை ஏற்படுத்தினார்.

ஒருவிளக்கு அணையாமல் எரியவேண்டுமாகில் அதற்கு இடையிடையே எண்ணெய் விடவேண்டும் அல்லவா? அப்படியே நமது பத்திவிசுவாசம் மங்காதிருக்கவேண்டுமாகில் தினந்தோறும் சற்றுநேரமாவது ஒரு நல்லபுத்தகத்தை அவதானமாய் வாசித்துயோசித்துவரவேண்டும். அது உன்ஆத்துமத்துக்கு உவப்பான போசனமுமாய்இருக்கும். வீடுகளிலே ஒருஆள் தெளிவாய், சற்று உரத்த சத்தமாய்வாசிக்க, வீட்டுக்காரர்எல்லாரும் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருப்பது உத்தமமானவழக்கம். இதனால் குடும்பத்துக்குப் பெரும்நன்மை விளையும்என்பதில் சந்தேகமில்லை. அநேக வீடுகளில் நல்ல வாசினைப்புத்தகங்கள் இல்லாதிருப்பது வருந்தத்தக்கது. நமதுவீட்டில் தேவாசீர்வாதம் நிலைக்கவேண்டுமானால் நல்ல புத்தகங்களைச் சேகரிப்பதிலும், வாசிப்பதிலும் சாக்கிரதையாயிருக்கவேண்டும்.

ஒருபுத்தகத்தைப் பரபரப்பாய் ஒருதரம்மாத்திரம் வாசிப்பதினால் அடையக்கூடியநன்மை மிகச் சொற்பமே. அதிகநன்மை அடையவேண்டுமானால் அதை மீண்டும்மீண்டும், மெய்யமெல்ல வாசித்து யோசிக்கப் பழகவேண்டும். வாசித்தவைகளின் பொழிப்பைக் குறித்துவைப்பது மெத்த உபயோகமானவழக்கம். நாள்தோறும் நாம் வாசிப்பதில் ஏதும்ஒரு நகாரியத்தை அல்லது எண்ணத்தை மனதில்அழுத்திவந்தால் வருடாவருடம் எவ்வளவோ காரியங்களை அறிந்துகொள்ளலாம். நமது வேதஅறிவுக்குத் தக்கதாய்ச் சருவேசுரனிலும், தேவகாரியங்களிலும் அதிகம் பற்றுதலுள்ளவர்களாய் இருப்போம். பிறருக்கும் இலகுவாய்த் தேவகாரியங்களைச் சொல்லிக்கொடுத்துப் பெரும்நன்மைசெய்வோம். வேதவித்துவான்கள் ஞானிகளாகப் பிறந்தவர்களல்ல. தினமும் வேதகாரியங்களை வாசித்து யோசித்து வந்ததினாற்தான் அநேக அருமையானகாரியங்களை அவர்கள்எழுதி உலகத்துக்குப் பெரும்நன்மை செய்திருக்கிறார்கள். அப்படியே நாமும் வேதகாரியங்களை நாள்தோறுஞ் சற்றுநேரமாவது வாசித்து யோசித்துவந்தால் நமக்கும் பிறர்க்கும் பெருநன்மை செய்வோமென்பதிற் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேம்பாவணியும் ஞானோபதேசமும்

(எம். பீ. மாஸ்கறேனுஸ்)

வீரமாமுனிவரென்னும்கல்விக்களஞ்சிய கவிச்சிங்கம் திருவாய்மலர்ந்தருளிய தேம்பாவணிப்பிரபந்தம், தமிழ்க் காவியங்களில் தலைசிறந்த நூல்களுள் ஒன்றென்பது தேற்றம். இந்நூல்நமது கத்தோலிக்க தமிழ்இலக்கியங்களுள் முதற்கணவைத் தெண்ணக்கூடியதென்பது நிறைந்த உண்மை. தேனினும் இனிய இத்தேம்பாவணியின் அதிசயத்திற்குரிய பாக்கள் சொல்நயமும், பொருள்நயமும்பொருந்தி, மிகவே ஆழமுடைத்தனவாய்ப் புலவர்க்கெல்லாம் வெகுபயன் பயப்பதுமல்லாமல், அதனுள் புதைந்துகிடக்கும் வேதவிருத்தாந்தங்கள் மிகவேவிருப்பும், வியப்பும்கொடுக்கக் கூடியனவாயும் இருக்கின்றன.

நாட்டுப்படலத்தில் எடுத்துச்சொல்லும் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலையென்னும் நிலச்சிறப்பும், நகரப்படலத்தில் கூறிவருகின்ற கோவில், கோபுரம், மாளிகைமுதலிய கட்டிடங்களின்சிறப்பும், நாடென்றால் அதுஇத்தலை யிருத்தல்வேண்டும்; நகரமென்றால் அதுஇங்ஙனம் அமைதல் வேண்டும்என்னும் நியமத்தையொட்டியதே. இத்தகையதேம்பாவணியில் கத்தோலிக்கமக்கள் அறிந்துகொள்ளக் கூடிய ஞானோபதேசங்களுக்கும் இடமிருக்கிறதாவென்றால், தேம்பாவணிச் செய்யுள்களில் பெரும்பான்மை நமது சத்தியவேத உண்மைகளையும், ஞானோபதேசங்களையுமே அஸ்திவாரங் கொண்டதென்கலாம்.

உதாரணமாக, தேம்பாவணிப் பாயிரத்தின் முதல்செய்யுளையே எடுத்துக் கொள்வோம்.

“சீரியவுலகமூன்றும் செய்தளித்தழிக்க [வல்லாய்
நேரிய வெதிரொப்பின்றி நீத்தவோர் [கடவுள் தூய
வேரிய கமலபாதம் வினையறப் பணிந்து [போற்றி
ஆரிய வளன்றன்காதை அறமுதல [விளங்கச்சொல்வாம்”

என்பதிலேயே, ஞானோபதேசத்தை விவரித்துக்கூறுவதற்கு எத்தனை இடமிருக்கிறது பாருங்கள். இச்செய்யுளைக்கொண்டு பரலோகத்தின் நித்தியத்தையும், பூலோகத்தின் அநித்தியத்தையும், பாதாளத்தின்உண்மைத் தன்மையையும், அம்மூன்றுலகங்களையும் படைத்துக்காத்து அழிப்பதற்கு வல்லமையுடையவராகி, எதிர்ப்பும இணையுமில்லாமல் அளவெல்லாங் கடந்த மெய்யங்கடவுளின் மகத்துவத்தையும், அவரதுதிருவடித் தாமரையை வாழ்த்திவணங்குவதில் எங்ஙனம் நமதுவினைப்பிணி தீருகிறதென்பதையும், இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேஸ்வரனை வளர்த்துக்காத்ததாதையாகிய அர்ச். சூசையப்பரின் வரங்களையும் ஞானோபதேசத்தில வியாக்கியானித்துக் கூறலாமல்லவா?

இனி, தேம்பாவணி நாட்டுப்படலம் 10-வது செய்யுள்—

“செறியுலாம்புனல் சிறைசெய்து பயன் [படவொதுக்கி
வெறியுலாமலர் மிடைந்தகல் வயல்வழி [விடுவார்
பொறியுலாம்வழி போக்கில தியல்பட [வடக்கி
நெறியுலாவற நோவை நிறுத்தினர் [போன்றே”

இச்செய்யுளைக்கொண்டு, வெள்ளநீரை அணைகட்டித்தடுத்து, அதனை ஒருவழிப்படுத்திச் சலத்தை வயலிடத்துச் செல்லவிடுகின்ற உழவர்களுடைய செயல், ஐம்பொறிகளையும் அவை போகிறவழியில் போகவிடாமல்அடக்கிப் புண்ணியவழியில் செல்லவிடுகின்ற முற்றுந்துறந்தமுனிவரின் இயல்பையொக்குமென எடுத்துச்சொல்லி, நமது குருப்பிரசாதிகளின் தபோபலத்தை ஞானோபதேசத்தில் சவிஸ்தாரப் படுத்தலாம்.

நகரப்படலம் 6-வது கவி—

“பயனினால் மறைநூல்ஒக்கும் பகலினை [மணியால்ஒக்கும்
வியனினால் உலகமொக்கும் வேலியால் [கன்னியொக்கும்
முயனினால் அலையையொக்கும் முனி [முனியொன்னார்க்கொக்கும்
நயனினால் உயர்வீடொக்கும் நகரினை [யொக்கும்வீடே”

என்பதில் ஜெருசலேம் நகர்தந்த பயனினால், சத்யமறையை யொக்குமெனவும், மதில்காவலினால் கற்பலங் காரிகளை யொக்குமெனவும், வேத விரோதிகளுக்கு முனிவரதுகோலத்தை யொக்குமெனவும், நன்மைகளினால் மோட்சசாம்ராஜ்யத்தையொக்குமெனவும் எடுத்துக்கூறி இவைகளையெல்லாம் ஞானோபதேசத்தில் விளக்கிக்காட்டலாம்.

இப்படியாக, வீரமாமுனிசுவாமிகள் நமக்கு இயற்றித்தந்த தேம்பாவணியில், ஒவ்வொருபடலத்திலும் அநேக செய்புள்கள்நமதுஞானோபதேசபாடத்திற்கு ஏற்ற பெற்றித்தாயிருக்கிறதென்பதை ஞாபகப்படுத்தி, இனித் தருணம் வரும்போதெல்லாம் ஞானோபதேச வகுப்பிற்குத் தேமபாவணியில் தகுதியானசெய்புள்களை எடுத்தாளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அன்றியும், தமிழ்நாடுபூராவும் கத்தோலிக்கு தமிழ்இலக்கியமென முழங்கிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் தமிழ்இலக்கிய நூல்களுக்கெல்லாம் தலைச்சீராவாகஇருக்கும் தேம்பாவணிப் பிரபந்தத்தை ஒதுக்கிவைத்துவிடுதல் ஒருசிறிதும் உசிதமல்லவென்பதை இன்னும்ஒருமுறை நினைப்பூட்டுகிறோம்.

— ச. வி.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரிசுத்தகன்னிமரியாய், அர்ச். தெரேசம்மாள் (குழந்தை), சங். அல்போன்ஸா சகோதரி இவர்களது மன்றாட்டினாலும் நான்கேட்டவிண்ணப்பம் இன்று அனுகூலமாயிற்று; நேர்த்திப்பிரகாரம்இதைப் பிரசுரிக்கிறேன்.

கண்டி P. A.

—ஐரோப்பாவிலே ஓர்யுத்தத்தை ருஷியா ஆரம்பித்தால் “நாம் அதை அழித்துவிடுவோம்” என்று அணுக்குண்டைக் கண்டுபிடித்துச் செய்வதில் உதவிசெய்த அமெரிக்க விஞ்ஞானியான டக்றர் வன்னெவர் புஷ் அவர்கள் 15-ந்திகதி பிலடெல்பியா நகரிலே தெரிவித்திருக்கின்றார். “ஜேர்மன் சமபூமிகளினூடாக ருஷியாவின் சேனைகள்உருண்டோடுமானால்” அவற்றை அடித்து விழுத்துவதற்கு அமெரிக்க ஐக்கியதேசம் வைத்திருக்கும் ஆயுதங்களையும் அவர் எடுத்துக்கூறினார்.

—தொழிலாளர்களின் உரிமைச் சாசனம் எனப்படும் “ரேறும் நொவாறும்” என்ற சாதாரண நிருபமானது பதின்மூன்றாஞ் சிங்கராய பாப்பாணவராலே விடுக்கப்பட்ட அறுபதாம் ஆண்டு நிறைவுவிழாவை வருகிறசித்திரை 22-ந்திகதிமுதல்ஆனி 17-ந்திகதி வரையில் கொண்டாடிக் கடந்தஅறுபதுவருடங்களிலும்ஏற்பட்டுள்ள சமூக நிலைமைபற்றி ஆராயப்படவிருக்கிறது.

—தனது ஆதிக்கத்தின்கீழுள்ள கிழக்குஜேர்மனியிலே ருஷியா பூரண கவசப்படைகள் அல்லது யந்திரஆயுதப்படைகள்தாங்கிய 35 படைவகுப்புகளைக்கொண்டிருப்பதாக அமெரிக்க அரசாங்கபகுதியாலே அறிவிக்கப்படுகிறது. இன்னும் ருஷியாவின் கூட்டுநாடுகள் கோறியயுத்தம் ஆரம்பமானது முதல் தங்கள் ஆயுதபலத்தை அதிகரிக்கச்செ[illegible]ன்றன.

Mal. No. 495. Eng.

## நின்பாவின்பாரம்பரைக்கதையும் கொன்றடின் சக்கிரவர்த்தியும்

ரோமைநகருக்குச்சமீபமாக பொன்ரினேசதுப்புநிலங்களின் எல்லைப்புறமாக மத்தியகாலத்து நின்பாநகரின் விசித்திரமான இடிகரைகள், சிறிய வாவியின் அமைதியானநீரில் பிரதிபிம்பித்துக் கொண்டிருக்கின்றன. 1640-ம்ஆண்டுவரையிலே இந்நகரம் இறுதியாக முற்றாய்க் கைவிடப்பட்டது. பின்வரும் பாரம்பரியமான அதிசயகதையட்டிலே கீழேதரப்படும் சம்பவங்களைச் சனங்கள்கூறிவருகிறார்கள்.

13-ம் நூற்றாண்டின்முடிவிலே ஹொகென்ஸ்ரோபென் வம்சத்தின் கடைசி வழித்தோன்றலான அழகுவாய்ந்த கொன்றடின் அரசன் நேப்பிள்ஸ்சக்கிரவர்த்தியை எதிர்த்து யுத்தத்தில்இறங்கியபோது அஸ்தூரியாவின் காஸ்ரெலன்பிரபுவான பிறாண்ஜிப்பானியால் கைதியாகப் பிடிக்கப்பட்டு நின்பாவிலுள்ள அவரதுகோட்டையில் சிறைவைக்கப்பட்டான். இந்தப்பிரபுவின் குமாரத்தி அந்தயுவ அரசனுடன் வலோற்காரமாகக் காதல்கொண்டாள். அப்போது அவள்தந்தையான பிரபு அவ்வரசனைச் சத்துராதிகளிடம் கையளிக்கவே அவன் கழுவேற்றப்படலாயினன். இதுநிகழ்ந்ததும் அப்பிரபுமகள் நின்பா வாவியினுள்மூழ்கி உயிரை மாய்த்துக்கொண்டாள்.

அதுமுதல் மங்குளமானஇராக்களிலே அவள் கருமையான பெரிய மேலங்கிஒன்றாலே தன்னைமுடிக்கொண்டு தண்ணீரிலிருந்து வெளிகொண்டு நின்பாவைச்சூழவரவும், ரோமையைச் சுற்றிவரவுள்ள வளப்பமும், சுகாதாரமுமற்ற வெளியிலும் அலைந்துதிரிகின்றாள். அவளுடைய மேலங்கியைத் தொடுவோர்எவரும் தப்பாமல் உயிர்மாளுகின்றனர்.... என்று பாரம்பரியமாகச் சொல்லப்படுகிறது.

இந்தநிர்ப்பாக்கியமாதிலும், அவளுடைய மரணத்துக்கேதுவான மேலங்கியிலும் மலேரியாவின் மாயாரூபத்தைக்கண்டு ஒப்புக்கொள்ள அதிக மனோபாவனை செய்யவேண்டியதில்லை. இந்தமலேரியா ரோமையைச்சூழவாவுள்ள வளப்பமும், சுகாதாரமுமற்ற வெளியின்மேலாகத் தனதுகருமையான தீயமுக்காட்டைப் போட்டுப் பரப்பியிருக்கிறது. இந்தமுக்காடு காலகதியிலே, ஓர்காலம் செழிப்புற்றோங்கிய கமக்கார சனசமூகம் வாழ்ந்திருந்த பகுதியைச் சகலராலுமே தவிர்க்கப்பட்ட சதுப்புவனாந்தரமாக மாற்றிவிட்டது. இற்றைக்கு முப்பது வருடங்களின்முன் இந்தச்செழுமை வாய்ந்த பகுதியானது வாதாட்டத்துக்கிடமில்லாமலே பாதிப்பக்கம் காட்டியல்புள்ள நீர் எருமைகளுக்கும், எண்ணிறந்த செம்மறியாட்டு மந்தைகளுக்கும் வசிப்பிடமாயிருந்தது.

ஆயினும் 20-ம்நூற்றாண்டின் ஆரம்பத்திலே இத்தாலியர்கள் தங்கள்சட்டைக்கைகளைச் சுருட்டிக்கொண்டு உலகமுழுவதுமே பெரிதும்பிரமிக்கும் படியாகஒரேசித்தமாய்த்திரண்டு மலேரியாப்பிரச்சினையைத் தீர்க்கமுயன்றார்கள். படிப்படியாக அந்தநிலம் வெற்றிகொள்ளப்பட்டது. கட்டுப்பட்டுநின்ற தண்ணீர் வற்றச்செய்துவிடப்பட்டது. திரும்பவும்கமச்செய்கைக் குள்ளாக்கப்பட்டது. வேலைகாரருக்கு இலவசமாகக்கொடுக்கப்பட்ட குயினைன் பாவனையாலேயே பெரும்பகுதியிலும் இதனைச்சாதிக்கக் கூடியதாயிற்று.

மலேரியாவைஎதிர்த்து நடத்தப்படுகின்ற படையெழுச்சியைப் பற்றிப் பேசும்போது, ஒருவர் இரண்டாவது உலகயுத்தத்துக்கு முந்தியவருடங்களிலே தற்சமயம் இல்லாதொழிந்துபோன சர்வதேசசங்கத்தாலே நியமிக்கப்பட்ட மலேரியாநிபுணர்களின் கமிற்றியால் இத்துறையில்செய்யப்பட்ட பெரும்பணியைத் தானகவே ஞாபகப்படுத்திக் கொள்ளுகின்றார்.

மலேரியாவைத் தடைசெய்வதிலே குயினைன் திருப்திகரமும், சித்திகரமுமான ஓர் அரிய மருந்தென்று அவர்களுமே சிபாரிசுசெய்திருக்கின்றார்கள். 1938-ம்ஆண்டு அவர்கள் வெளியிட்ட தங்கள் அறிக்கையிலே மலேரியாவராமல் ஒருபாதுகாப்பாக மலேரியாக்காலமுழுவதும் தினமும் 6 கிறெய்ன் குயினைன் அருந்திவரவேண்டுமெனக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்னும் ஓர்கால் மலேரியாபீடிக்குமிடத்து ஓர் சிறந்தமருந்தாக 5 முதல் 7 தினங்களுக்குக் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் பாவித்துவரவேண்டுமெனக் கருத்துக்காட்டியிருக்கின்றார்கள்.

## திரிகோணமலை மேற்றிராசனத்தபால்

### ஞானோபதேசப் பரிசளிப்புவிழா

“சகலபாடங்களையும் சித்திகரமாகப்படிப்பித்த கத்தோலிக்க ஆசிரியர் தமது ஞானோபதேசப்பாடத்தை நன்றாகப் படிப்பித்திலராயின் ஓர்கத்தோலிக்க ஆசிரியரென்றமட்டிலே அவர் தமது முதன்மையும், முக்கியமுமானகடமையில் தவறிவிட்டார். ரசாயனத்திலோ அன்றேல் கணிதத்திலோ கண்ணியமான அரங்கேற்றங்கள் பெற்றுக்கொண்ட கத்தோலிக்கமாணவன் பாராட்டுரைக்குப் பாத்திரமானவனே. ஆனால், சமயபாடத்தில் அவன் கண்ணியமான ஓர்அரங்கேற்றத்தைப் பெற்றிருப்பானாகில் மிகவும் கணிக்கத்தக்க பாடம்ஒன்றில் அவன் வெற்றி ஈட்டியிருக்கிறான்.”

இவ்வாறு திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி S. J. ஆண்டவர் தமது மேற்றிராசனத்திலே ஞானோபதேசத்தில்அதிகத் திறமைகாண்பித்த மாணவர்களுக்குப் பரிசில்கள்வழங்கியபின் கூறலாயினர்.

“கத்தோலிக்க பாடசாலை ஒன்றில் மகாவிசேஷட்பட்டபாடம் சமயபாடமே. ஏனெனில், நமது வாழ்க்கையில் மகாவிசேஷப்பட்டபணி, சர்வேசுரனைச்சேவித்து ஆத்துமாக்களைஈடேற்றுவதே என்பதை நாம் அறிவோம். கத்தோலிக்கபாடசாலைஒன்றில் இந்தமகாவிசேஷப்பட்ட போதனை மாணவர்களின் உள்ளத்திலே அழுத்தமாக நன்குபதிக்கப்பட வேண்டும்” என்றும் ஆண்டவர் அவர்கள் கூறிநின்றார்.

ஞானோபதேசத்திலே அதிகஞ்சிறந்த பாடசாலையாக மட்டக்களப்பிலே மரியாயின் பிரான்சீஸ்கன் மிஷனரிய கன்னிகாஸ்திரீமாராலே நடத்தப்பட்டுவரும் அர்ச். தெரேசம்மாள்மடத்துப் பாடசாலையே முதலிடம் வகிக்கலாயிற்று.

குருமார் நியமனம்:

திரிகோணமலை மேற்றிராணியார் பின்வருமாறு குருமாரை நியமனஞ் செய்திருக்கின்றார்:

வண. ஏ. அலோய்சிங்க, Mis. Ap. சுவாமியார், மான்தீவுக் குஷ்டரோக ஆஸ்பத்திரி ஞானவிசாரணைக்குரவர்.

வண. ஜே. எச். பெங்ளர், S. J. சுவாமியார், தாழங்குடாக் கட்டளைக் குரவர்.

வண. ஜே. அலெக்சாண்டர்சுவாமியார், தன்னாமுனைக் கட்டளைக்குரவர்.

வண. ஹோர் S. J. சுவாமியார்: பூனா மிஷனைச்சேர்ந்த இவர் மட்டக்களப்பு சம்மிக்கேல் கல்லூரியின் ஞானவிசாரணைக் குரவராக மாற்றஞ் செய்யப்பெற்றிருக்கின்றார்.

கல்லூரிப் பாண்டுவாத்தியம்:

சம்மிக்கேல் கல்லூரிப் பாண்டுவாத்தியகோஷ்டி இலங்கை வானொலியில் அரைமணிநேரம் அஞ்சல்செய்வதற்காகச் சென்றவெள்ளிக்கிழமை கொழும்புக்குச் சென்றிருக்கிறது. பாடசாலைப் பையன்களுக்கு, விசேஷமாய் எவ்விதஆயத்தமுமில்லாது தொடக்கவேண்டியிருந்த பையன்களுக்கு இது மதிப்புக்குரியதோர் செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. சவிரிமுத்து யோசெவ் அவர்களின் தேகவியோகம்

நம்பட்டணவாசரும், றெயில்வேப் பகுதியில் கடந்த 33 ஆண்டுகளுக்கு மேல் தலைமைக் 'காட்'டாக உத்தியோககடமை ஆற்றிவந்துள்ளவருமான திரு. சவிரிமுத்து யோசெவ் அவர்கள் அம்மம்ம! காத்திராப்பிரகாரம் சுன்னுகறெயில்வே ஸ்ரேஷனில் நேர்ந்த விபத்துஒன்றுலே திடீரென மரணமானுரெனும் பரிதாபசெய்தி கேட்ட யாழ்ப்பாணவாசிகள்பலரும் திகைத்துச் சலித்துப் பரிதபித்துநின்றூர்கள். இவர் தமது உத்தியோக கடமைகளை மிகுந்ததிறமையுடன் நிறைவேற்றி வந்தாராகலின் றெயில்வேப்பகுதியில் இவருக்கு நல்லமதிப்பும், செல்வாக்கும் இருந்துவரலாயிற்று. அதனுல் தமது உடன்உத்தியோகஸ்தராலும், மேலதிகாரிகளாலும் மிக்க கண்ணியமாக நடத்தப்பட்டுவந்தார். தமக்கு இயல்பாயுள்ள இன்சொல்லாலும், அயலோம்பும் பெருந்தன்மையாலும், எவர்க்குமெஎந்தவேளையிலுமே தம்மாலான உதவிசெய்யும் அருங்குணத்தாலும் செல்லுமிடமெல்லாம் நல்ல பெயர் ஈட்டிவந்தார்.

இளவாலைக் கட்டளைக்குரவான வண. ஜே. எவ். சேவியர்சுவாமியார் இவரதுபாரியாரின் ஒன்றைவிட்ட சகோதரர். மன்னுரிலுள்ள கன்னிகாமடத்துச் சிரேஷ்டரும், மடத்து ஆங்கிலகலாசாலைத் தலைவியுமான சங். மதர் அக்குவைனஸ்தாயார் இவரது பாரியாரின் சகோதரியாவர். இளவாலைக் கன்னிகாமடத்தைச்சேர்ந்த சங். சிஸ்றர் மேரியேசு அவர்கள் இவரின் சிரேஷ்டபுத்திரியாவர். இலங்கைச் சாவகலாசாலையில்கல்விபயின்றுவருகிற திரு. எல்மோ யோசெவ் இவரின் சிரேஷ்டபுத்திரர். கொழும்பிலே மத்தியதபாற்கந்தோரில் டி. ஐ. ரி. ஆக உத்தியோகம்வகித்திருக்கும் திரு. ஸ்ரனிஸ்லாஸ் பிலிப்ஸ்அவர்கள் இவரின் மைத்துனர். இவரின் ஏகசகோதரரான திரு. எஸ். பீற்றர் அவர்கள் கொழும்புப் பிரதம தபாற்கந்தோரில் அக்கவுண்டன்ராகவும், இவரின்சகோதரிகளிலே செல்வி அந்தோனியாசவிரிமுத்து யாழ்ப்பாணக் கன்னிகாமடத்து ஆங்கிலகலாசாலையில் ஓர் ஆசிரியையாகவும் இருந்துவருகின்றனர். திருமதி சூசைப்பிள்ளை மற்ரோர் சகோதரியாவர்.

இவரின் பிரேதசேமம் மறுநாள் சாயந்தரம் அநேககுருமாரும், கன்னிகாஸ்திரீமாரும், மடத்துப்பிள்ளைகளும், பெருந்திரளான இனசனர், சிநேகிதர், உத்தியோகஸ்தர்களும்கூடிய சமூகத்திலே வண. ஜே. எவ். சேவியர் சுவாமியார் கடைசிஆசீர்வாதங்கூறி நிற்க அதிசிறப்பாய் நடந்தேறியது. இவரின்மரணத்தாலே "எல்மோ" எனும் இவரதுஇல்லம் இருள்சூழ்ந்ததாய்க் காட்சியளிக்கின்றது. இவரையிழந்து துன்புறும் பாரியார் பிள்ளைகளுடனும், தாயார், சகோதரர், சகோதரிகள், மற்றுமுள்ள இனசனருடனும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

### இராமநாதன் நூற்றண்டுவிழா

தமிழ்ப்பெருந்தலைவர்களில் ஒருவராக விளங்கியிருந்து காலஞ்சென்ற சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் பிறந்தநூற்ருண்டுவிழா வருகிற சித்திரைமாதம் 16-ந்திகதி திங்கட்கிழமை வருகின்றது. எமது பெருந் தேசாபிமானிகளில் ஒருவரான அவர் மட்டிலே காண்பிக்கவேண்டிய நன்றியின் அறிகுறியாக இதனைத்தக்கவாறு இலங்கைமக்கள் கொண்டாடுவது தகுதியாகுமெனத் தெரிவித்து வலென்ரின் எஸ். பெரேறு, எஸ். சிவசுப்பிரமணியம்என்னும் இருவர்சேர்ந்து பத்திரிகைகளிலே செய்திஒன்று வெளியிட்டிருக்கின்றனர்.

## சுதேச வர்த்தமானம்

### ஜேர்மன் எஞ்ஜினீர்

இரண்டாவது உலகயுத்தத்திலே ஜேர்மனிய தாங்கிஎதிர்ப்புப்படையில் ஒருவராயிருந்த திரு. டபிள்யு. எவ். ஜே. கோவர் அவர்கள் காங்கேசன்துறைப் 'பவர்ஹவுஸ்' எஞ்ஜினீராக நியமனம்பெற்றுவந்து சென்ற திங்கட்கிழமை தம்பதவியைக் கையேற்றிருக்கின்றூர். இவர் ஐந்துவருடப்பொருத்தனையில் இங்குவந்திருக்கிறூர். தற்போது காங்கேசன்துறைப் பவர்ஹவுசில் எட்டாவதுஎஞ்ஜின் பொருத்தப்பட்டுவருகிறது. இந்தவேலை இன்னும் ஒருமாதத்தில் பூர்த்தியானதும் யாழ்ப்பாணநகரசங்கம் காங்கேசன்துறையிலிருந்து தனக்குவேண்டிய 'கறெண்'ரைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகும்.

### பெற்றேலும் மண்ணேண்ணேயும்

அடுத்துநிகழும் சித்திரைமாதம் 1-ந்திகதி தொடக்கம் பெற்ரோலின்விலை ஐந்துசதத்தால் அதிகரிக்கவிருக்கிறது. இதற்குக்காரணம் அதன் இறக்குமதிக் கப்பற்கூலி அதிகரித்திருப்பதேயாம். என்ருலும் பஸ்சலார் ஏற்றப்படமாட்டாது. மண்ணெண்ணெயின் விலையும் அன்றுமுதல் அதிகரிக்கவிருக்கிறது. ஆனுல், அதனைப்பாவிப்போர் அதற்குக் கூடியவிலைகொடுக்க வேண்டியதில்லை. ஏனெனில், மண்ணெண்ணெயின் இறக்குமதித்தீர்வையைக் குறைக்க அரசினர் தீர்மானித்திருக்கின்றனர்.

### அதிகசாராயப் பாவனை

மதுவிலக்குப்பிரசாரம் மும்முரமாக நடைபெற்றுவந்தபோதிலும் இலங்கையிலே முந்திய 1949-ம்ஆண்டைக் காட்டிலும் சென்ற 1950-ம்ஆண்டிலே 1,87,000 கலன் சாராயம் அதிகமாகச் செலவாகியிருப்பதாக உத்தியோகமுறையான புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. இலங்கையிலே கடந்தநான்கு வருடங்களிலும் சாராயப்பாவனை படிப்படியாக அதிகரித்துவந்து சென்ற வருடத்திலே 13,38,030 கலன் செலவாகியிருக்கிறது. இவ்விதம் அதிகரித்ததற்கான காரணங்களில் ஒன்று, பிறதேச குடிவகைகளுக்குத் தடைவரிகள் விதிக்கப்பட்டமையென்று எக்சைஸ் கம்மிஷனர் கூறுகின்றூர்.

### பலாங்கோடை உபதேர்தல்

சேர் பிரான்சீஸ் மொலமூறேஅவர்களின் மரணத்தாலே பிரதிநிதிகள் சபையில் காலியாயிருக்கும் பலாங்கொடை ஸ்தானத்துக்கு அபேட்சகர்களாய் மூவர் வெளிகொண்டு சென்ற 20-ந்திகதியன்று இரத்தினபுரிக் கச்சேரியிலே தங்கள் நியமனபத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர். இவர்களில் ஒருவர் 40 வயசுடைய ஓர் பிரமச்சாரியும், அங்குள்ள ஓர் தோட்டத்தலைவரும், இரண்டு அடி நீளமான மீசையைக்கொண்டவருமான திரு. எஸ். சின்னத்தம்பிஅவர்கள். ஏனையஇருவரிலும் திரு. ஜயவீரகுறுப்புஅவர்கள் யு. என். பி. கட்சி அபேட்சகர். திரு. பி. ஜோதிபாலா என்பவர் லங்காசமசமாஜகட்சி அபேட்சகர்.

### கமத்தொழிற் தலைவர்

ஐக்றிங் கமத்தொழிற் தலைவராகக் கடமையாற்றிவந்தவரான டக்றர் எ. டபிள்யு. ஆர். ஜுவக்கிம்அவர்கள் தற்போது கமத்தொழிற் தலைவராகநியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றூர். திரு. டி. றிண்ட் அவர்களிடமாக நியமனம்பெற்றுள்ள இவர் தொழில்நுட்ப விஷயமாய்ப்பயிற்சிபெற்றமுதல் இலங்கையராவர். கமத்தொழிற்பகுதியிலே இவர் 25 வருட அனுபவமுடையவர். பி. எச்டி., பி. எஸ்சி. (லண்டன்) பட்டங்களும், கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையில் எவ். ஐ. சி. எனும் கமத்தொழில் வித்தியா அதிகாரப்பத்திரமும் பெற்றவர்.

### புதியதபாற்கந்தோர்கள்


தபால்-தந்தி மந்திரியாரான திரு. சி. சிற்றம்பலம் அவர்கள் சாவகச்சேரித் தொகுதியைச்சேர்ந்த பிற்போக்கான பகுதிகளிலே சிலதினங்களாகச் சுற்றுப்பிரயாணஞ்செய்து, பாந்தன் புதிய குடியேற்ற தலத்திலே உபதபாற்கந்தோர்ஒன்றைத்திறக்க அனுமதித்திருக்கின்றூர். பாந்தன் தபாற்கந்தோரில் மத்தியதெலிபோன்வசதி அமைக்கவும் ஒழுங்காயிருக்கிறது. மற்ரோர்கமப் பகுதியாகிய குஞ்சுப்பாந்தன் தெலிபோன்சேவையைப் பாந்தனுடன் கொண்டதாய் உபதபாற்கந்தோர் ஒன்றை உடையதாயிருக்கும். மிருசுவில் உபதபாற்கந்தோரும் வருகிற ஆனிமாசம் தெலிபோனுல் இணைக்கப்படும். சாவகச்சேரித் தபாற்கந்தோரில் அதிகமானவேலை நடைபெறுவதையும், அதிலேஇடம் மிகநெருக்கடியாய் இருப்பதையும் கவனித்து மிகப்பெரிய தபாற்கந்தோருக்கான இக்காலமாதிரிக் கட்டடமொன்றை அமைக்கஅனுமதித்திருக்கின்றூர்.

—சப்மறின்களை எதிர்த்துநடத்தும் யுத்தத்துக்கென்று அமெரிக்கவாசு பிராணுபயமான நவீன ரோர்பிடோக்களையும், ஆகாயபாணங்களைச் செலுத்தும் புதுமாதிரி லோஞ்சையும் கண்டுபிடித்துக் கட்டியிருக்கிறது. இவைகள் அமெரிக்ககடற்படையை மேலும் பலப்படுத்தவிருக்கின்றன.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பாத்திமாமாதாவின் அருளால் எனக்குண்டான வருத்தம் விலகியது. அவரின் நாமம் அகிலமும் புகழப்படுவதாக. நேர்த்தியின்பிரகாரம் பிரசுரிக்கிறேன்.

கண்டிக்குளி V. P. M.

Osram
REGD. TRADE MARK
ஒஸ்றம்
அற்புதமான லாம்பு
கொடுக்கும் விலையிலும் கூடிய பலன் உள்ளது.
வாக்கர் அன் கிறீக் லிமிட்டெட்.
கொழும்பு, கண்டி, வதுளை, டிக்கோயா, அப்புத்தளை, லிந்துலா.


### Ceylon Government Railway

LEVEL CROSSING REPAIRS

The Level Crossing at 51 miles 73 chains (Railway mileage) on the Elipitiya-Polwatte Road between Balapitiya and Ambalangoda Railway Stations will be closed for vehicular traffic as follows for effecting repairs:-

Partially from 6-00 p. m. to 10-00 p. m. on Sunday, 8-4-51 and from 4-00 a. m. to 6 a. m. on Monday, 9-4-51.

Totally from 10-00 p.m. on Sunday, 8-4-51 to 4-00 a. m. on Monday, 9-4-51.

During the period of Total closure, the traffic will be diverted through Polwatte-Ambalangoda Road.

### Ceylon Government Railway

LEVEL CROSSING REPAIRS

The Level Crossing at 47 miles 23 chains 60 Links (Railway mileage) on the Thalawitiya-Kurugammodara Road, between Eheliyagoda and Parakaduwa Railway Stations will be closed for vehicular traffic as follows for effecting repairs:-

Totally from 10-00 p. m. on Thursday, 5-4-51 to 4-00 a. m. on Friday, 6-4-51.

During the period of Total closure, traffic will be assisted over the crossing.

E. C. Wijeyesekera,
for General Manager, C.G.R.

P. O. Box No. 355,
Colombo, 22-3-51.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 29 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org